# தாரகை

ஜனவரி - 1983

விலை - ரூபா 2/50



நொடிந்து கிடந்த இலக்கிய உலகின்
மருந்தாகி மாமலையாய் சஞ்சீவியாய் மானிடனாய்
பறந்து இசைத்த பசுஞ்சோலைக் குயில்
இறந்து போனதோ? இமயம் சரிந்ததோ...?

—சாருமதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு

# கெயின்ஸ் கல்வி நிலையம்

நெல்லியடி, கரவெட்டி

---

# NELLIADY DIAMOND WELDERS

(Regd. No. 10767)

- LATHE WORKS
- GAS WELDING
- ELECTRIC WELDING
- FITTING
- PLUMBING
- GATE AND GRILL MAKERS

## NELLIADY DIAMOND WELDERS

NELLIADY,
KARAVEDDY.

Prop:
**N THARMARAJAH**

திரைகை மாத இதழ் 7
ஜனவரி - 1983

# கைலாசபதியெனுங் கலைக்கூடம் சரிந்தது!

ஈழத் தமிழகம் ஒரு தவப் புதல்வனை இழந்தது; முழு உலகுமொரு பேரறிஞனை இழந்தது; பல்கலைக் கழகமொரு பேராசிரியரை இழந்தது; பாரதி நூற்றாண்டின் முடிவிலொரு பேரொளி அஸ்தமனமாகிவிட்டது.

நாடு போற்றும் நல்லறிஞனாய் — சிந்தனையாளனாய் — ஆய்வாளனாய் — இலக்கியவாதியாய் — பத்திரிகையாளனாய் — சமுதாயத்தின் முன்னோடியாய் — விமர்சகனாய் — நண்பனாய் — ஆலோசகனாய் — நடமாடும் ஒரு பல்கலைக் கழகமாகவே வாழ்ந்தவனின் இருதயம் இயங்காமல் நின்றுவிட்டது.

கைலாசபதியெனுங் கலைக்கூடம், மண்ணோடு மண்ணாக மரணித்துவிட்டது.

கல்லில் சமைந்ததுதான் சிற்பம்! கல்லை மறந்து சிற்பத்தை ரசிக்கவில்லையா?

மரணத்தில் கைலாஸ் சங்கமமாகிவிட்டார். தழுவிய மரணத்தை மறந்து, கைலாசின் சேவையை — பெருமையை — திறமையை எண்ணியெண்ணி மன நிறைவு கொள்ளவேண்டிய கட்டத்திற்கு நாம் பின்தள்ளப்பட்டிருக்கிறோம். இன்னொரு கைலாசைத் தேடியலையவேண்டிய துர்ப்பாக்கியம் நமக்கு.

சின்ன வயதிலேயே கல்வியெனுங் கருந்தனத்தைப் பெரிய அளவில் பெற்றவர் கைலாசபதி. பேராதனைப் பல்கலைக் கழகப் பட்டதாரியான இந்தக் கல்விமானுக்கு, பர்மிங்ஹாம் (Birmingham) பல்கலைக் கழகம், 'கலாநிதி' பட்டமளித்துக் கௌரவித்தது. யாழ் பல்கலைக் கழக வளாகத்தின் முதலாவது தலைவராகவும், யாழ் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடாதிபதியாகவுமிருந்து அருந்தொண்டாற்றிய கைலாசை, சுற்றிவருவதிலேயே சிலரும், சூழ இருப்பதிலேயே பலரும், இவர் பெயரைப் பயன்படுத்திக்கொள்வதிலே வேறு சிலருமாக அநேகர் தம்மை இனங்காட்ட முற்பட்டனர். எனினும் அவர்களுக்குளெல்லாம் முதல்வராகக் கைலாசே வெளிப்பட்டார்.

தினகரன் ஆசிரியராக இவர் இருந்த காலகட்டம், ஈழத்து எழுத்துலகின் பொற்காலமாகும்.

ஈழத்து முற்போக்கு இயக்கம், இவரை முன்னோடியாகக் கொண்டே தன்னை இனங் காட்டியதெனலாம். இவரது முன்னுரைகளை வெளியிடுவதன் மூலமே தமது நூல்களுக்கு விளம்பரம் தேட முயன்றவர் அநேகர். இளைய தலைமுறையினரையும் தட்டிக்கொடுத்து உற்சாகமூட்டிய அந்தப் பெரு விருட்சம் மண்ணில் சாய்ந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாவல் இலக்கியம், ஒப்பியல் இலக்கியம் போன்ற விலைமதிப்பற்ற நூல்கள், தமிழ்நாட்டின் பல்கலைக் கழகங்களிலேயே பயன்படுத்தப்படுகின்றன.

நான்கு வரிகளில் ஒரு கடிதமெழுதிப் போடுவதற்கே 'நேரமில்லை' என்று தட்டிக்கழிக்கும் நம்மவர் மத்தியில், நேரத்தை மதித்தொழுகியவர் கைலாசபதி. எந்த மட்டத்திலிருந்து வந்தாலும், வந்த கடிதத்திற்குக் கௌரவமளித்துப் பதிலெழுதும் வழக்கத்தை இறுதிவரை மறவாமற் கைக்கொண்டவர் கைலாஸ். குறித்த இடத்திற்கு, குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னரே சமூகங் கொடுக்கும் உயர்ந்த உள்ளம் கைலாசினுடையது.

கைலாசபதியின் திடீர் மரணம், கல்விமான்களுக்கு மட்டுமன்றி, அனைத்து உலகிற்குமே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

மீதிப் புலமையையும் காட்ட வகை செய்யாமல், பாதி வயதிலேயே வழி மறித்த காலனைத் திட்டி அமைதியடையவேண்டியதுதான்.

இந்தத் தலையங்கத்தை எழுதிக்கொண்டிருக்கும் வேளையில்தான் மற்றொரு பேரிடி இதயத்தில் விழுகிறது. ''தேவன்–யாழ்ப்பாணம்'' என்ற பெயரில் எழுதி வந்த இலக்கியப் பிரகிருதியும் தன் பயணத்தை முடித்துக்கொண்டார் என்பதே அந்தச் செய்தி. இலங்கையில் மட்டுமன்றி தமிழகத்திலும் தன் பெயரை நிலைநாட்டிய ஆசிரியப் பெருந்தகையின் மரணம் மட்டுமென்ன சாதாரணமானதா?

இந்த ஆண்டின் இறுதியில் எஞ்சியதெல்லாம் இழப்புக்கள்தான். சில இழப்புக்கள் சில தோற்றங்களுக்கு வழிசமைக்குமோ என்னவோ? அதற்கும் காலம்தான் பதில் சொல்லவேண்டும்.

— **ஆசிரியர்**

---

## ப ர ம ரா ட் சி ய ம்

நச்சு மரங்களும் கோடரிகளும்
நாட்டிலிருப்பதை நாமறிவோம்
கர்த்தரே
நல்ல கனிகளை நல்கா மரங்கட்கு
நாசம்வருமெனும் சேதியறியோம்
கர்த்தரே

துச்சமென்று ஏழைகளை துன்பப்படுத்திடும்
துட்ட மரங்களை நாமறிவோம்
கர்த்தரே
நிச்சயமவைகள் நெருப்பில் விழ
நேரம் வர நேருமென நாமறிவோம்
கர்த்தரே

உழையாது பிறர் உழைப்பில் வாழ்ந்திடும்
ஒட்டுண்ணிகளை நாமறிவோம்
கர்த்தரே
களையாது பிறர் களைப்பில் இளைப்பாறிடும்
கல்நெஞ்சர் வீழ்ந்திடும் காலமிது
கர்த்தரே

தேவனின் ராட்சியம் வேகமாய் வந்திடும்
சேதியறிவோம் கர்த்தரே
பாதைதிருத்தி அப்பரம ராட்சியத்தை
பார்க்க விழைகிறோம்
கர்த்தரே.

— **வீ. ஆனந்தன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சல்

ஒக் நவ. இதழில் 'சிலோன் விஜயேந்திர னுடன் ஒரு செவ்வி' நன்ருக இருந்தது. இப் படியே ஒவ்வொரு இதழிலும் ஒவ்வொரு கலை ஞரை, அவரது புகைப்படத்துடன் அறிமுகப் படுத்தலாமே?

சாவகச்சேரி — ப. செல்வராணி.

அக்டோபர் இதழைக் காணவில்லையே என்று ஏங்கிய வேளையில், நவம்பரையும் இணைத்து வந்ததில் சிறு ஆறுதல். இலக்கியத் தரமானதொரு சஞ்சிகையைத் தொடர்ந்து வெளியிடுவதில் எத்தனையெத்தனையோ சிரமங் கள் ஏற்படத்தான் செய்யும். சில நாட்கள் பிந்தினுலும்கூட தவருது வெளிவரவேண்டு மென்பதே என்போன்றவர்களின் வேணவா. சிரமங்கள் தவிர்க்கமுடியாதிருப்பின் இரு திங் கள் இதழாகவோ காலாண்டிதழாகவோ தொடர்ந்து வெளியிடவே முயற்சிசெய்யுங்கள்.

அரியாலை — C. L. பிரேமினி.

காலாண்டுக்கு ஒரு தடவை தாரகையில் வெளியாகும் சிறுகதைகளை மதிப்பீடுசெய்து அதிலொன்றுக்குப் பரிசு வழங்கும் உங்கள் திட்டம் மனதுக்கு இதமாக இருக்கிறது. இன் னும் இலைமறைகாய்களாக இருக்கும் சிறந்த கலைஞர்களுக்கு இடமளிப்பதோடு, கவியரங் கம், அறிஞர் வாக்குகள் போன்ற சில அம் சங்களையும் சேர்த்துக்கொண்டால் நிச்சயம் 'தாரகை' நம்நாட்டு அனைத்துவாசக நெஞ்சங் களிலும் மங்காது ஒளிவீசும் என்பதில் ஐய மில்லை.

கொச்சிக்கடை — கே. எப். நூர்லாஹூ

எதிர்பார்த்த அளவிற்குப் பாரதி சிறப் பிதழ் மனநிறைவைத் தரவில்லையே. நீலா வணனின் கவிதையை வெளியிட்டது, ஒரு மறைந்த கவிஞனுக்குச் செய்த மரியாதை என் றளவில் ஒரு நல்ல முயற்சியே. மாதந்தோறும் பத்திரிகை வெளிவரவேண்டும் என்பதல்ல முக் கியம்; நாலு வந்தாலும் நல்லதாக வரவேண் டும். ஆரோக்கியமான ஒரு வாசகர்வட்டத்தை உருவாக்குவதை விடுத்து, ஆயிரத்தோடு ஒன் ருக தாரகையும் நின்றுவிடக்கூடாது.

அம்பன் — எஸ். கே. விக்னேஸ்வரன்.

தாரகையே! என்றன் தமிழின் உயரேடே! சீரொழுக வந்தாய்! சிறப்புற்ருய்! - பாருள் ளோர் ஆக்கங்கள் எல்லாமே அச்சேற வழி செய்வாய், பூக்குமே புதிய யுகம்!

மகருகிராமம் — அ. கௌரிதாஸன்.

தாரகையின் அனைத்து இதழ்களும் படித்து இன்புற்றவனில் நானும் ஒருவன். தணியாத கலைத்தாகம் நிறைந்த கலைஞர்களுக்கு வரப் பிரசாதம். போட்டி, விவேக நிகழ்ச்சிகள், கேள்வி பதில் அம்சங்கள் இடம்பெருதது கவ லைக்குரியதே. சுவைஞர்களின் உற்சாகத்திற் காக குறுக்கெழுத்துப் போட்டியும் ஆரம்பிக்க லாமே?

சாய்ந்தமருது — எஸ். எம். எம். ருபீக்.

'தாரகை' பற்றி, அதன் வளர்ச்சி யிலும் நலனிலும் அக்கறைகொண்ட இலக்கிய ஆர்வலர்கள், வாசகர்கள் மத் தியிலிருந்து தினந்தோறும் பல்வேறு அபிப்பிராயங்கள் கொண்ட கடிதங்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. நல்ல சில ஆலோசனைகளும் முன்வைக்கப்படுகின் றன. அனைவர்க்கும் நன்றிசொல்லக் கட மைப்பட்டிருக்கிருேம். எல்லோர் மனதை யும் திருப்திப்படுத்துவது எந்த ஒரு இலக் கியப் பத்திரிகைக்கும் சாத்தியமான தல்ல. எனினும் 'தாரகை' ஒரு நம்பிக்கை நட்சத்திரம் என்பதை மட்டும் அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக, புத்தம் புதிய அம்சங்களுடன் வெளிவருமென உறுதி தருகிருேம்.

- ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகள் கற்கண்டு. ''காவலுக்கு நான் வாரன்'' — நல்சுவை. குறுநாவலில் ஒருவேகம் தெரிகின்றது. செவ்வி நல்ல சுறுசுறுப்பு. சிறுகதை மதிப்பீடு மனதுக்குத் திருப்தி. (எழுத்தாளர்களைப் புண்படுத்தாமல், பெருந்தன்மையோடு உற்சாகப்படுத்தி விமர்சித்திருக்கும் பாணி விரும்பத்தக்கது) தாரகையின் தரத்தைப்பற்றி எவரும் குறைகூறமுடியாது. எனினும் அதன் வருகை அதன் தரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

பெரியகல்லாறு — வி. கே. ரவிப்பிரியா

சஞ்சிகைகள் தோன்றுவதற்கும் மறைவதற்கும் காரணமே வாசகர்களாகிய நாங்கள் தான். நம்நாட்டு வாசகர்களும் இலக்கிய சுவைஞர்களும் போதிய ஒத்தாசையும் ஆதரவும் கொடுப்பார்களேயானல், தாரகையும் மாதந்தோறும் மகிழ்ச்சியோடு மலர்ந்து வருமென்பதில் சந்தேகமே இல்லை.

செல்வி மங்கை கங்காதரத்தின் ''உயிர்த் துடிப்புகள்'' சிறப்பான சிறுகதை. தாய் தகப்பன் இல்லாத குறையை தீர்த்துவந்த தாத்தாவும் என்ன செய்வார்? அவரது காலமும் நேரமும் வர அவரும் போய்த்தானே ஆகவேண்டும்.

செல்வாநகர் — ஆரையூர் மூர்த்தி.

ரவிப்பிரியா எழுதிய 'ஒரு ஆரம்பமும் அதன் முடிவும்' அருமையானதொரு சிறுகதை குறிஞ்சினியை எதிர்பார்த்து ஏமாந்து அவன் கலங்கும்போது.... நாமும் கலங்குகிறோம். மங்கை கங்காதரமும் சோடைபோகவில்லை. அன்பும் பாசமும் வைத்த மனிதர்களின் 'உயிர்த் துடிப்புகள்' அழகாகச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன.

சரசாலை — கே. சிவசங்கரநாதன்.

இம்மாத 'தாரகை' இதழை விரித்ததும், பாரதி பற்றிய கவிதையே கண்ணில்பட்டது. பாரதியார் பற்றிய கவிதைகள் சிறப்பாக இருந்தன. நியாயமான போராட்டங்கள் சுவையாகத் தொடர்கிறது. மொத்தத்தில் நல்ல கருத்தடக்கம், தயவுசெய்து மாதந்தொடங்கியதும் கிடைக்கும்படி செய்யுங்கள்.

சரசாலை — தயாமதி முத்துலிங்கம்.

# பேராசிரியர் கைலாசபதி

— சாருமதி —

மனிதன் தனது ஜனனத்தின் போதே மரணத்தையும் உடன் கொள்கின்றான். மரணம் என்பது மனிதனின் வெறுப்பிற்கு உரிய குரூரமான ஒன்றாகவே கருதப்படுகிறது. மனிதன் மரணத்தைக்கண்டு அஞ்சுகின்றான். தியாகியாக, தற்கொலை செய்தோராக மரணத்திற்கு இணக்கம் கொண்டவர்கள்கூட இதற்கு விதிவிலக்கல்ல. மரணத்தை துணிவுடன் ஏற்றான் என்கின்றோம். அச்சத்திற்கு உரிய ஒன்றை ஏற்பதற்கே துணிவு தேவைப்படுகின்றது.

ஜனனத்திற்கும் மரணத்திற்கும் இடைப்பட்டதே வாழ்க்கை. வாழ்க்கை எனும் வார்த்தைக்கு ஒரு பொதுப்பொருளும், அதேநேரத்தில் தனிப்பொருளும் உண்டு. சமுதாயத்தின் வாழ்க்கை எனும்பொழுது அஃது ஒரு பொதுப் பொருளைக் காட்டுகின்றது. இந்தப் பொதுப் பொருள் என்பது பல தனிப்பொருள்களின் தொகுப்புத்தான்; துளிகளால் ஆன தண்ணீர் போல்.

### அப்பனே மகனாகி...

எத்தனை தனியன்கள் உண்டோ உலகில் அத்தனை தனி வாழ்க்கைகள் உண்டு. ''அப்பனே மகனாகி'' என, மகாகவி வாழ்க்கைக்கு தொடர்ச்சி கண்டார். ஆயினும் அந்த அப்பனும் மகனும் இரண்டு வாழ்க்கையின் சொந்தக்காரர்கள். ஏனெனில் அவர்கள் அப்பனும் மகனும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தனியன்களின் வாழ்க்கைதான் சமூகக் கூட்டு வாழ்வில் தனிமனிதனின் முக்கியத்திற்கு காரணமாகின்றது. மாபுருஷன் அல்லது மகத்தான மனிதன் என்றெல்லாம் நாம் ஒருவனை அடைமொழியிடும் பொழுது தனி வாழ்க்கைதான் அங்கு சிறப்பிக்கப்படுகின்றது.

மனிதகுல வரலாற்றை விளக்குவதில் பின் வரும் இரண்டு அம்சங்கள் நெடுங்காலமாக பிரயோகிக்கப்படுவது உண்டு.

I. வரலாற்றின் பொதுக் காரணங்கள், எது எது நடக்கவேண்டுமோ அதைஅதை நடத்தி வைக்கும். எனவே தனிநபர்கள் முக்கியமன்று. மனிதன் வெறும் கருவி.

II. எல்லாம் வல்ல சக்தி ஒன்று, எல்லாவற்றையும் நடத்துவிக்கின்றது. அந்த சக்தியின் நியமப்படி நடக்கவேண்டியவை நடந்தேதீரும்.

இந்த இரு கருத்து விளக்கங்களையும் நாம் விதிவாதம் எனலாம். பகவத்கீதை விதிவாதம் சார்ந்தது.

## மார்க்சியமும் விதிவாதமும்.

மார்க்சிய வாதிகள் விதிவாதத்தை ஏற்றுக் கொள்வதில்லை. பொதுக்காரணங்கள் வரலாற்றின் போக்கைத் தீர்மானிப்பதில் அடிப்படையாகச் செயற்படுகின்றது என்பதை ஒத்துக்கொள்ளும் அவர்கள், இந்தப் பொதுக் காரணங்களுடன் சில பிரத்தியேகக் காரணங்களும் வரலாற்றை உருவாக்குவதில் காத்திரமான பங்கைக் கொள்கின்றன என்பர். எதிர்பாராத நிகழ்ச்சிகள், தனியாள் பங்கேற்றல் என்பன அவ்வகைப் பிரத்தியேகக் காரணங்களுள் அடங்கும். ''அவன் ஒரு வரலாற்றைப் படைத்தான்'' என நாம் சிலசந்தர்ப்பங்களில் கூறுவதுண்டு. நேரடி அர்த்தத்தில் இவ்வாறு கூறுவது தவறுதான். எந்த தனிமனிதனும் தனது சூழலுக்கு மிஞ்சி எந்த வரலாற்றையும் படைத்துவிடுவதில்லை. மனிதன் சூழலுக்கு கட்டுப்பட்டவன். சூழலால் உருவாக்கப்படுபவன். எந்தச் சூழலுக்கு மனிதன் கட்டுப்பட்டவன் ஆகின்றானோ, எந்தச் சூழலால் மனிதன் உருவாக்கப்படுகின்றானோ, அந்தச் சூழல் உருவாகுவதற்கும் மாற்றம் உறுவதற்கும் மனிதனின் குறுக்கீடு அவசியம். இந்த அர்த்தத்தில் மனிதன் வரலாற்றைப் படைக்கின்றான்.

## மா மனிதர்கள்.

''இந்த மாறுதல் (சமுதாய மாற்றம்) என்றுமே தானாக நிகழ்வதில்லை. இதற்கு எப்பொழுதும் மனிதர்களின் குறுக்கீடு அவசியமாகின்றது. இப்படித்தான் மனிதர்களை மாபெரும் சமுதாயப்பிரச்சனைகள் எதிர்கொள்கின்றன. மற்றவர்களைவிட யார் இந்தப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு உதவியாக அதிகமாகப் பணிபுரிகின்றார்களோ அவர்களைத்தான் மாமனிதர்கள் என்று அழைக்கின்றோம்.''

சமுதாய மாற்றமும், அதற்கான மனிதர்களின் குறுக்கீடும், அதில் தனிமனிதனின் பங்களிப்பும் பற்றிய 'பிளக்னோ'வின் இம்மேற்கோள், வரலாற்றில் தனிமனிதப்பாத்திரம் பற்றிய தெளிவைத்தருகின்றது.

இதுவரை கூறப்பட்ட முன்கூட்டிய தயாரிப்புகள் யாவும், பேராசிரியர் கைலாசபதி அவர்களையும் அவர் இறப்பின் இழப்புக்களையும் மதிப்பீடு செய்வதற்குப் போதுமானது என நான் கருதுகின்றேன்.

## பேராசிரியர் கைலாசபதி.

பேராசிரியர் கைலாசபதி அவர்கள், கடந்த 1982 - 12 - 06ந் திகதியன்று இரத்தப் புற்று நோயால் இயற்கை எய்தினார். பாரதியார் நூற்றாண்டை ஒட்டி சுறுசுறுப்பான பாரதி ஆய்வுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அவர், பாரதியார் பற்றிய முழுமையான ஒரு ஆய்வை வெளியிடுவார் என இலக்கிய உலகம் எதிர்பார்த்து இருந்தது. அத்தகைய ஒரு நூலை கைலாசபதி அவர்கள் எழுதிவந்தார் எனவும் நாம் அறிகின்றோம். ஆயினும் அந்த முயற்சி முற்றுப்பெறவில்லை. அதற்குள் பேராசிரியரின் வாழ்க்கை முற்றுப் பெற்றுவிட்டது. தனது பாரதியார் பற்றிய நூலுக்கான தகவல்கள், ஆதாரங்கள் என்பவற்றை லண்டன் வாசிக சாலையிலிருந்தும்கூட பேராசிரியர் கைலாசபதி அவர்கள் சேகரித்து வைத்திருந்தார். தமிழ் இலக்கிய உலகிற்கு பேராசிரியர் கைலாசபதி அவர்கள் பல பங்களிப்புகளைச் செய்துள்ளார். அந்த வரிசையில் பாரதியியல் பற்றிய அன்னாரின் முழுமையான பங்களிப்பைப்பெறும் பாக்கியத்தை தமிழ் உலகம் இழந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைலாசும் முற்போக்கும்.

தமிழகத்தில் இருந்து வந்த வியாபார குப்பைகள்தான் இலக்கிய சாம்ராட்டுக்கள் என ஈழத்து இலக்கிய உலகு நம்பிக்கொண்டிருந்த வேளையில், இலங்கையின் தேசிய மணத்தை தனது மூச்சாகக்கொண்டு, முற்போக்கு இலக்கிய எழுத்தாளர் அணியொன்று ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி ஐம்பதுகளில் உருவாகியது. அ. ந. கந்தசாமி, கே. கணேஷ், இராமநாதன் போன்ற முன்னோடிகளே இதன் மூலகர்த்தாக்கள் எனக் கூறலாம். இந்த வரலாற்றுப் பாரம்பரியத்தை சார்ந்தவர்தான் பேராசிரியர் கைலாசபதி அவர்கள்.

1950ல் ஏற்பட்ட இலங்கையின் அரசியல் மாற்றங்கள் இலங்கையின் தேசிய உணர்ச்சிகளுக்கு உந்துதல் ஆயின. இந்த வரலாற்றுச் சூழல் வேண்டிநின்ற தேவையை தமிழ் இலக்கியத்தில் தொடக்கி வைப்பவராக பேராசிரியர் கைலாசபதி அவர்கள் திகழ்ந்தார். விபூதிப் பூச்சும், பண்டிதப் பேச்சும், தொல்காப்பியப் பெருமையும் தான் தமிழ் என்று கருதிவந்தோர் செல்வாக்குக்கொண்டு இருந்த தமிழ் இலக்கிய உலகில் பேராசிரியர் கைலாசபதி அவர்கள் தர்க்க ரீதியான அணுகுமுறையொன்றைத் தாபித்தார். ஓடிய தடத்திலேயே ஓடுவேன் என வீண்வீரம் பேசிய தமிழ் இலக்கிய உலகை புதியதோர் வழிக்குக் கொண்டுவர வாய்க்கால் சமைத்தவர்களில் பேராசிரியர் கைலாசபதி அவர்கள் தலைமகனுவார். பழந் தமிழ் இலக்கியத்தை ஆய்வதில் பேராசிரியர் கைலாஸ் சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தைப் பிரயோகித்தார். காலம், களம் என்பவைகளில் இருந்து பிரித்து இலக்கியத்தை சுவைப்பதாகப் பாவனைசெய்த இலக்கியப் பூசாரித்தனத்தை பேராசிரியர் கைலாசபதி அவர்கள் நிராகரித்தார். காலம், களம் என்பவைகளில் சார்ந்து இலக்கியத்தைக் காணும் சமூகவியல் நோக்குத் திறனாய்வுப் பார்வையை அவர் தமிழ் இலக்கிய உலகில் நிலைகொள்ளச் செய்தார். அதில் தனது தனித்துவங்களைப் பதித்தார். பேராசிரியர் கைலாசபதி அவர்கள் மார்க்சிய தத்துவச் சத்தியத்தை நேசித்தார். அதன் ஆதரவாளனாய் இருந்தார். ஈழத்து இடதுசாரி அரசியல் இயக்கங்களுக்கு அவர்

● கவிதாஞ்சலி

## விந்தியமா யெங்கள் சிந்தை நிறைந்தவனே !

**— முத்து இராசரத்தினம் —**

வெற்பொன்று வீழ்ந்ததடா ! விழிநீர் பெருகுதடா !
பொற்பாயிருந் தவனின் பூதவுடல் மறைந்ததடா !
முற்போக் கணியினொரு மூலவேர் சாய்ந்ததடா !
கற்போ ருலகிலொரு கரியவிருள் சூழ்ந்ததடா !

திக்கெட்டுந் தமிழ்முழக்கம் செய்ததமிழ்க் காவலனே
நிர்க்கதியில் விட்டெம்மை நீடுதுயில கொண்டனையோ ?
தினகரனாய் இருந்தெம திருளகற்றி நின்றாயே
கிரகணமா யுன்னைக் கவிந்த பொருளெதுவோ ?

நில்லா வுலகினிலே நிலைபெற டையவென(ப்)
பொல்லா வுலகினின்று பொசுக்கென்று போயினையோ ?
இல்லா விதயத்தா ரிங்குபலர் வீற்றிருக்க
நலலோய் ! நீயேனோ நடுவழியில் விடைபெற்றாய் ?

கைலாச பதியே ! கன்னற்றமிழின் கருந்தனமே !
உள்ளா சகல உண்மை யுரைத்தவனே
விந்தியமா யெங்கள் சிந்தை நிறைந்தவனே
கலாநிதியே யுன்னை(க்) கருதிவழி செல்வோமே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிச்சயமானவராகவும் இருந்தார். மார்க்சிச - லெனினிச - மாஓ சிந்தனை மீது பேராசிரியர் கைலாசபதி அவர்கள் மிகுந்த மதிப்புக்கொண்டு இருந்தார். இந்த இடதுசாரி அரசியல் பக்கச் சார்பே அவரின் இலக்கிய உலகுச் சிறப்பிற்கும் அத்திவாரம் ஆயிற்று.

இலங்கையின் முற்போக்கு இலக்கிய வளர்ச்சிக்கு எதிராக பிற்போக்குச் சனுதனிகளின் எதிர்த்தாக்குதல்களுக்கு எதிரான போராட்டத்தில் பேராசிரியர் கைலாசபதி அவர்கள் முற்போக்கு இலக்கிய முகாமின் சார்பில் முன்னின்று தன் அறிவுத்திறத்தால் முற்போக்கு இலக்கிய முகாமின் வளர்ச்சியை அரண் செய்தார். இதற்காக அவர் எதிரிகளால் பல அசிங்கமான முறைகளில் எல்லாம் தாக்கப்பட்டார். பழைய - நவீன - பிற்போக்குப் பண்டிதர்கள் பலவகையான தந்திரங்களைக் கொண்டு பேராசிரியர் கைலாசபதி அவர்களைத் தாக்கினர். கைலாஸ் என்ற மலை அவைகளுக்கெல்லாம் ஈடுகொடுத்தே நின்றது.

ஈழத்து தமிழ் இலக்கிய உலகில் தன் சொந்தக் கால் பதித்துநின்று பேராசிரியர் கைலாசபதி அவர்கள் செயற்பட்ட பொழுதிலும், அவரின் காத்திரமான பங்களிப்புக்களின் காரணமாக அவர் உலகத்தமிழ் இலக்கியப் பரப்பிலேயே முக்கியத்துவம் மிக்கவர் ஆனர். இன்று பேராசிரியர் கைலாசபதி அவர்களின் மறைவையொட்டி, அவருக்குப்பின் அவரது பணியைத் தொடர்பவர் யார்? என்ற கேள்வி எழும்பொழுது, நாம் யாரையும் காணக்கூடியதாய் இல்லை. தான்மட்டும் இன்றி தன் வழியில் தமிழ் அறிஞர்களை உருவாக்குவதில் கைலாசபதி அவர்களின் செயற்பாடு செல்வாக்குச் செலுத்தியே உள்ளது. ஆயினும் அவர்கள் யாரும் இன்றைய நிலையில் பேராசிரியர் கைலாசபதியின் தரத்திற்கு ஒப்பாக வளரவில்லை என்பது வேதனைக்குரிய விஷயம்.

## பேராசிரியரின் நூல்கள்.

வீரயுகப் பாடல்கள் (ஆங்கிலம்), இருமகா கவிகள், அடியும் முடியும், இலக்கியமும் திறனாய்வும், திறனாய்வுப் பிரச்சனைகள், தமிழ் நாவல் இலக்கியம் போன்ற இலக்கிய நூல்களுடன் 'சீனம் - காட்சியும் கருத்தும்' என்ற பயணக் கட்டுரை (இணையாசிரியர்) நூலுமாக மொத்தம் பதின்மூன்று நூல்கள் அவருடையதாக வெளிவந்துள்ளன.

இவை தவிர எண்ணற்ற பல்வேறு கட்டுரைகளை அவர் பல்வேறு பிரசுரகளங்களில் வெளியிட்டுள்ளார். மேலும் ஈழத்து இலக்கிய உலகிலும் தமிழகத்திலுமாக அவர் நூற்றிற்கும் மேற்பட்ட மேடைகளில் இலக்கியம் சார்ந்த பல அரிய கருத்துச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார். கைலாசபதி என்ற மனிதனின் வாழ்க்கையை நோக்கும்பொழுது, அங்கே அவரது இலக்கியப் பங்களிப்பே முதன்மை பெறுகின்றது. எனவே அவரின் வாழ்வு பற்றிய எமது மதிப்பீடு அவரின் இலக்கியப் பங்களிப்பைச் சார்ந்தே உள்ளது. பேராசிரியர் கைலாசபதியின் சிறப்பு அல்லது சிறப்பின்மை என்பதைக்கூற முனைபவர்கள், அவரின் வாழ்க்கை வழி முதன்மை பெறும் இலக்கியப் பங்களிப்பைக் கொண்டே மதிப்பிடல் அவசியம். இந்த அடிப்படை உண்மைக்கு அப்பால் விலகி, கைலாசபதி அவர்களின் வாழ்க்கை வழிவேற்று அம்சங்களை முதன்மைப்படுத்தி அவரை மதிப்பீடு செய்ய முயல்வது முட்டாள்தனமானதும் உண்மைக்கு முரணானதும் ஆகும். ஒரு ஓவியனின் ஓவியத்துறை ஈடுபாட்டின் சிறப்பைக்காண விரும்பியவன் அந்த ஓவியன் தன் மனைவியுடன் எவ்வாறு நடந்துகொள்கிறன் என்பதைப் பார்த்து, குறிப்பிட்ட ஓவியனின் ஓவியத் துறைப் பங்களிப்பை அறிந்துகொள்ள முயன்றல் அது எவ்வளவு அபத்தமோ அதையொத்ததே பேராசிரியர் கைலாசபதியின் இலக்கியப் பங்களிப்பிற்கு அப்பால் வேற்று அம்சங்களை முதன்மைப்படுத்தி அவரைக் காண்பதுமாகும். அவரை ஒரு தாபன நிர்வாகியாக - அரசியல் வாதியாக - என்றெல்லாம் முதன்மை அளித்து நாம் மதிப்பீடு செய்யப் புகுவோமானல், நாம் காணவேண்டிய கைலாசபதியை தவறவிட்டு விடுவோம். கைலாசபதி அவர்கள் சிறந்த நிர்வாகி; இடதுசாரி அரசியல் சார்பாளன்; ஒரு மனிதாபிமானி என்பதெல்லாம் உண்மைதான். ஆனல் நாம் இன்றுகூறும் கைலாசபதி என்ற நாமம் அவரின் இலக்கிய உலகு ஈடுபாட்டிலேயே தன் ரூபம் பெற்றுள்ளது.

ஆக கைலாசபதியின் மறைவு தமிழ் இலக்கிய உலகிற்குப் பேரிழப்பு. (இறந்தவர்கள் எல்லாம் பேரிழப்பே என்ற வழக்கமான வார்த்தைகளில் அல்ல) சிறந்த ஒரு அறிவு ஜீவியை மிக இளைய பருவத்திலேயே தமிழ் உலகு இழந்து விட்டது. இருண்டுகிடந்த தமிழ்ச் சிந்தனைகளில் ஒளிபாய்ச்சிய அந்தத்தீபம் அணைந்து விட்டது. பழமைவாதப் பிடிப்புக்கொண்ட தமிழ்ச் சமூகத்தை விழித்தெழச் செய்யமுடியும் என்ற நம்பிக்கையுடன் பூபாளம் பாடிய அந்த ராகம் ஒலிப்பது நின்றுவிட்டது. விடியுமுன், அந்த வைகறைக் குரலின் வரலாறு முடிந்துவிட்டது. நல்லதோர் வீணை தணலாகிச் சாம்பலாகிவிட்டது. பிற்போக்கு இலக்கிய வாதிகளின் இடிகளை எதிர்த்துநின்ற அந்த இமயம் சரிந்துவிட்டது. இனி..... இனி..... இன்னெரு இமயம் எமக்கு எப்போது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பகலுக்காக காத்திருக்கிறார்கள்

"இனிப் புழுக்கம் இருக்காது" - முணுமுணுத்துக் கொண்டு குடத்துடன் கிணற்றுப் பக்கமாக பொன்னம்மா நடக்கிறாள்...

இடைவிடாமல் வீசுகின்ற காற்று பூவரச மரங்கள் உதிர்த்திய சருகாய்ப் போன இலைகளை அள்ளிச் சென்று மூலைமுடுக்கெல்லாம் ஒதுக்குகிறது... கூடவே முற்றத்து மணலையும் வாரிச் சுருட்டி இங்கேதான் போடவேண்டுமென்று இல்லாமல் எங்கெல்லாமோ குவிக்கிறது.

வீசுகின்ற காற்றால் சருகுகள் வரைகின்ற கோலங்களை வெறித்து நோக்கிக் கொண்டு வடிவேலன் இருக்கிறான்.

முன்புபோல் வியர்வை கசியவும் இல்லை; புழுங்கவும் இல்லை. ஆனால் மனம் — ?

முற்றத்தின் ஒரு புறத்தில் மூட்டிய அடுப்பில் கருப்பனீர் பாணியாகிறது. அடுப்புக்கு வெளியே எரிந்துகொண்டிருந்த கங்கு மட்டையை அடுப்புக்குள் திணித்துவிட்டு லட்சுமி வருகிறாள்.

முகத்தில் எந்தவித பாவங்களையும் காட்டிக் கொள்ளாமல் திண்ணையில் ஓரமாக வந்தமர்ந்துகொண்டாள்.

குட்டான் ஓலைகள் கை விரலுக்குள் அகப்பட, விரல்கள் இயந்திரமாகின்றன.

வடிவேலன் அக்காவை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டான்.

ஊஹூம்...! எந்தவித உணர்ச்சியையும் வெளிக் காட்டிக்கொள்ளாமல் இருக்க அவளால் எப்படி முடிகிறது?

பெருமூச்சு எழும்பிக் காற்றில் கரைகிறது...

அவனால் பொன்னம்மாவுக்கோ, லட்சுமிக்கோ என்ன பிரயோசனம்?

வடிவேலனுக்கு மனம் புழுங்குகிறது...

ஒரு முறை இரண்டு முறையல்ல, எட்டாவது

**செங்கதிர்**

முறையாக லட்சுமிக்குப் பேசி வந்த திருமணம் குழம்பி இருக்கிறது...

பெண்ணைப் பிடிக்கவில்லையென்று குழம்பி இருந்தால் போகட்டும் என்று ஒருவேளை மன ஆறுதல் பட்டிருக்கலாம்.

ஒரு கிழமைக்கு முன்னர் பெற்றோரும் உற்றாருமோடு மகனும் வந்து லட்சுமியை அணு அணுவாய்ப் பார்த்துவிட்டுப்போய் கடிதம் எழுதி இருக்கிறார்கள்...

'பெண்ணை மகனுக்குப் பிடித்துவிட்டது. மாப்பிள்ளைக்கு இருபத்தையாயிரம் ரூபா கொடுக்க முடியாவிடில் சம்மதம் இல்லை!'

எட்டு முறை! எட்டு வீட்டாருக்கு முன்பாகவும், எட்டு ஆண் சிங்கங்களுக்கு முன்பாகவும் கூனிக்குறுகி இருந்து எழும்பிவிட்டாள். சும்மாவாக அல்ல! இவன் தான்... ஓ இவன்தான் என்னுடைய கணவன் என்ற நினைவோடு! இங்கிதமான உணர்வோடு!

அந்த நினைவு, அந்த உணர்வு, அந்த எதிர்பார்ப்பு எல்லாம் ஏதோ ஒரு இல்லாமையால் அழிக்கப்பட எந்தவித சலனமுமின்றி லட்சுமி இயங்குவது வடிவேலனுக்கு ஆச்சரியத்தை மட்டுமல்ல, ஆத்திரத்தையும் கொடுக்கிறது.

லட்சுமி மனம்விட்டு ஓவெனக் கத்தி அழுதாலோ, 'எனக்கு நீங்கள் மாப்பிள்ளை பார்க்க வேண்டாம்' — என மனம் விரும்பாமல் சொல்லித் தனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தை வெளிக்காட்டி ஜீர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணித்துக்கொள்ள முயன்றிருந்தால் வடிவேலனின் மனம் அவ்வளவு தூரம் கசங்கி இருக்கமாட்டாது.

லட்சுமி ஒன்றையும் காட்டிக்கொள்ளாமல் வாழ்வதும், ஒன்பதாவது முறையாக இன்னுமொரு மாப்பிள்ளை பக்கம் பெண் பார்க்க வந்தால் கடந்த எட்டு முறை அவள் நடந்துகொண்டதைப் போல நடந்துகொள்ள பின்னடியாத தன்மையும்தான் வடிவேலனை நெருடுகிறது...

அந்தவிதமான உறுத்தலில், பணம், நகை, வீடு, காணி - இவை மட்டுமே லட்சுமியின் எதிர்காலத்தை நிர்ணயிக்கின்ற கருவிகளாக அமைகின்றன என்பதை அனுபவரீதியாக அறியும்போது, ஒரு தம்பி தனது அக்காவுக்காக என்னத்தைச் செய்திருக்கிறான் என்ற உணர்வு உறுத்துகிறது...

இன்னுமொருபுறம் இவை இல்லாமலேயே லட்சுமி இன்றைய உலகில் வாழ முடியாது என வடிவேலன் உணருகின்ற பட்சத்தில்கூட லட்சுமியையும் இன்னுமொருவனையும் இணைத்துவைக்க இவையே அதி உன்னத இடத்தை வகிப்பதை அவனால் அங்கீகரிக்க முடியாமல் திணறுகிறான்.

கோவிலுக்குச் செல்பவர்கள் அர்ச்சனை செய்வதற்கும், அர்ச்சனை செய்பவர்கள் மட்டுமே கோவிலுக்குச் செல்ல முடியும் என்பதற்குமிடையே எவ்வளவு வேறுபாடு நிலவ முடியுமோ அதுபோலவேதான் லட்சுமி வாழ்வதற்கு பணம், வீடு, காணி தேவையென்பதும், பணம், வீடு, காணி - இவையேதான் லட்சுமிக்கு ஒரு வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கும் என்பதற்குமிடையே வேறுபாடு உண்டு என்பதை உணரும் தறுவாயில் பொருள் மட்டுமே லட்சுமியின் தலையெழுத்தை நிச்சயிக்கக்கூடிய சூழல் ஒன்று இங்கு நிலவுவதையும், அதை மீற முடியாமல் அந்தச் சூழல் மிகப் பாதுகாப்பான முறையில் வளர்வதற்கு அந்தச் சூழலே காரணமாக அமைகிறதை உணரும்போது, வடிவேலனிடம் மிஞ்சி நிற்பது கோபமும் சினமும்தான்.

இந்த எண்ணங்கள் அரும்பியபோது எட்டாவது முறையாக லட்சுமியைப் பெண் பார்க்க வந்தவர்களிடத்தில் மட்டுமல்ல எட்டு முறை வந்தவர்களிடத்திலுமே ஆரம்பத்தில் தோன்றி இருந்த கோபம், மனக்கசப்பு தணிந்து-மெல்லத் தணிந்து-அவர்களைப் பதினைந்தும், இருபத்தைந்தும் கேட்கவைக்கின்ற சூழல்மீது வெறும் காழ்ப்புணர்ச்சி மட்டுமே எஞ்சுகிறது.

அந்தச் சூழல் ஆரம்பத்தில் இருந்தே இறுக்கமானதொரு அத்திபாரத்தில் கட்டப்பட்டிருக்கிறது என்பதும், அந்த இறுக்கத்தை நெகிழ்ச்சி அடையச்செய்வதிலும் பார்க்க அதை இன்னும் இறுக்கத்தான் நடந்தேறிய திருமணங்கள் உதவிபுரிந்துள்ளன என்பதை அறிகின்றபோது, அவன் தனித்து நின்றோ அல்லது அவர்கள் மூவருமாகச் சேர்ந்து நின்றோ அந்தச் சூழலை இலேசில் உடைக்க முடியாதென்பதை விளங்கிக் கொள்கின்றபோதும் லட்சுமிக்கு இன்னுமொரு மாப்பிள்ளையைப் பார்த்து இன்னுமொரு தடவையும் அவளைக் கூனிக்குறுக வைக்க மனமொப்பாமல் இருபத்தையாயிரம் ரூபாவை எப்படி, எங்கே புரட்ட முடியுமென எண்ணுகிறான்...

இந்த எண்ணம் - இந்தப் பின்னடிப்பு - இந்தத் தன்னளவினுலான தப்பல் இவைதான், இவையேதான் சற்றுமுன்னர் இவனுடைய காழ்ப்புணர்ச்சிக்குள்ளான சூழலுக்கு இறுக்கத்துக்கான உரமாக அமைகிறது என்பதும், அந்தச் சூழலை மீற முடியாமற்போவதற்கு காரணமாகிறது என்பதும் நெஞ்சின் மூலையில் கிறுக்கலாய் விழுகிறது...

கிறுக்கலில் இருந்து இரத்தம் சொட்டுகின்ற

---

## சமூகம் என்பது...

எனக்கு
வேலை கிடைத்தவுடன்
வழமைபோல்
எல்லோருடனும்
கதைத்துத் திரிந்தேன்.
அதற்கு —
''வேலை கிடைச்ச புறகு
ஆளப் பிடிக்கவே
இயலுதில்லை...''
என்றார்கள்.
அதனால் —
கதைப்பதைக்
குறைத்தேன்.
விட்டாரா ..?
''வேலை கிடைச்சதுதான்
தாமதம்,
ஒருத்தனோடும்
கதைக்கிறானே இல்லை..''
என்கிறார்கள்...?

—நற்பிட்டிமுனை பளீல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும், அந்தச் சூழலை எதிர்த்து நிற்க முடியாத அற்ப மனிதனுக ஆக்கப்படுகிறேனென்ற நினைப்பு அவனை பிராண்டித்தள்ளுகிறது.

சுய விருப்பு வெறுப்புகள், பந்த பாசங்கள், குடும்பத்தளவிலான எண்ண ஓட்டங்கள் மட்டும்தான் அவனிடத்தில் வளர்ந்திருக்கின்றன — வளர்க்கப்பட்டிருக்கின்றன என்பதை அவன் கண்டபோது, இந்த விருப்பு வெறுப்புகள், பந்த பாசங்கள், குடும்பத்தளவிலான எண்ண ஓட்டங்களற்றவர்கள்மீது மதிப்பும், மரியாதையும் ஏற்படுகிறது.

அந்த மதிப்பும், மரியாதையும் இன்னும் ஒருவர் மீது — வடிவேலன்மீது பாராட்ட முடியாத நிலைக்குள் வாழ்கிறேனென்ற நினைப்பு அரும்ப, அந்த நினைப்பை பலவந்தமாக அடக்கிக்கொண்டு பணத்துக்கு என்ன செய்யலாம் என்ற சிந்தனைக்குள்ளாகிருன்...

வடிவேலனின் வெறித்த பார்வையையும், சிந்தனையையும் கவனித்துக்கொண்டிருந்த லட்சுமி, அவன் யாரைப் பற்றிய சிந்தனையில் மூழ்கித் தவிக்கிருன் என்பதை உணர முடியாமல் அனுதாபம் கொண்டாள்.

எட்டு முறை ஏமாந்துபோன அவளிலும்பார்க்க எத்தனை எட்டு முறை அவன் ஏமாந்துவிட்டான் என்பது லட்சுமிக்குத் தெரியாதது அல்ல.

'நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்கவும்' என்று தந்தியோ, தபாலோ கிடைக்கின்றபோது, அந்த வேலை தனக்குக் கிடைத்துவிட்டதாக எண்ணி மகிழ்கின்றவன், அதில் பங்குபற்றிவிட்டு வீட்டுக்குத் திரும்பும்போது எல்லாமே இழந்த நிலையில், சோர்ந்துபோய் இருப்பதை விடவா தான் இருக்கிறேனென்று நினைத்துக்கொண்டாள்.

என்ன உணர்ச்சியானுலும் அப்பட்டமாக வெளிக்காட்டிக்கொள்கின்ற வடிவேலன் முகம், ஏதோவொன்றிற்காக ஏங்குவது அப்பட்டமாகத் தெரிய, கிடைக்காத வேலையொன்றைத்தவிர அவனுக்கு வேறு என்ன கவலை என மனதை ஆறுதல்படுத்திக்கொண்டபோது, கடைசித் தடவையாக நேர்முகப் பரீட்சைக்குச் சென்றுவிட்டு வந்தபோது வடிவேலன் சொன்னவை காதில் தெறிக்கின்றன...

"...பதினையாயிரம் ரூவா இருந்தால் போதும். பாங்கிலை உத்தியோகம் எடுத்துப்போடலாம்... எங்களுக்கு நடக்கிற இன்ரவியூவெல்லாம் ஒரு டிமிக்கி...."

லட்சுமிக்கு ஒரு கணம் பொறிதட்டியது.

பெண் பார்க்கிற படலத்திற்கும், வேலைக்கு இன்ரவியூவுக்கு போவதற்கும் இடையே நெருக்கமான உறவு இருப்பதைக் கண்டுகொண்டாள்!

அவளுக்குத் திருமணமென்றுல் இருபத்தையாயிரம் ரூபா! வடிவேலனுக்கு வேலையென்றுல் குறைந்தது பதினையாயிரம் ரூபா!

இந்த வியப்பானதும், விசித்திரமானதுமான நிலையைக் கண்டு அனுபவித்தவளுக்கு ஒரு கணமாவது கோபம் வரவேண்டாம்? — சிரிப்புக்கூட உதிரவேண்டாம்?

லட்சுமிக்கு ஒன்றும் வரவில்லை.

இந்த ஆயிரங்கள் செய்கின்றதை நியாயமான உணர்ச்சிகளும், உணர்வுகளும் செய்யும் திறனற்று, செயலிழந்துவிடுவதையும் கவனிக்கின்றபோது, அந்த ஆயிரங்களுக்கு உடமையானவர்கள் இந்தத் திருமணத்திற்காகவும், இந்த வேலைவாய்ப்புக்காகவும் வடிவேலனைப் போலவோ லட்சுமியைப் போலவோ சிந்திக்கமாட்டார்கள் என்ற முடிவுக்கு வரும்போது லட்சுமி, வடிவேலன் எல்லாரும்...

வீசுகின்ற காற்றில் சருகுகள் அள்ளுண்டுபோய் மூலைமுடுக்கெல்லாம் குவிவது போல அவர்களும் மூலைமுடுக்கெல்லாம் குந்தி இருப்பது தான் நியதியாகிவிடுமென்று நினைத்தபோது குறைந்தது பதினையாயிரம் ரூபாவுக்கு லட்சுமி உடமையாகிவிடுவாளென்றுல் வடிவேலனுக்கு வேலையொன்று கிடைத்துவிடும் என்ற நினைப்பு அரும்ப லட்சுமியின் நெஞ்சு மேலும் வைரம் பெற்று இறுகுகிறது.

முற்றத்தில் கருப்பனீர் பாணியாகி வரளுகிறது...

குட்டானில் பனங்கட்டி போட்டு முடிய கருக்கலாகிவிட்டது.

வெள்ளிக்கிழமையாதலால் பக்கத்துக் கோவிலில் ஒலிபெருக்கி உறுமுகிறது...

கோவில் மணி ஓசையும் ஒலிக்கத்தொடங்குகிறது.

இருபத்தையாயிரம் ரூபா இல்லாவிடில் திருமணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கு சம்மதமில்லையென்று கடிதம் வந்த நேரம் தொடக்கம் பொன்னம்மாவும், வடிவேலனும் அவளுடன் முகங் கொடுத்துக் கதையாமல் ஒதுங்கி ஒதுங்கி இருப்பது அந்த நிமிஷம்வரை எந்தச் சலனத்தையும் நெஞ்சில் அரும்பத்தானும் அனுமதிக்க மறுத்துவிட்டவளின் நெஞ்சின் ஓரத்தில் சிறு சலனத்தை விதைக்கிறது.

அம்மாவுக்கும், தம்பிக்கும் அவள் பாரமாகிவிட்டாள் என்ற நினைப்பு நெஞ்சில் நெருட அவள் கிணற்றுப் பக்கமாகச் செல்கிறுள்...

'பிரமசத்தி பிடிச்ச நாய்க்குப் பலனில்லை...' அறைஞ்சாற்போல பொன்னம்மா லட்சுமியைத் திட்டித் தீர்த்திருந்தாற்கூட அவளுடைய நெஞ்சின் ஓரத்தில் சற்று முன்னர் முளைத்த சிறு சலனம் முளைத்திருக்காது.

'நான் இருக்கிறன்... இதுக்குப்போய் நீ யோசிக்காதே' —வடிவேலன் இப்படி ஒரு வார்த்தையாவது பேசி இருந்தால் வழமைபோல அவள் இருந்துவிடுவாள்...

கிணற்றுப் பக்கமாக லட்சுமி நகர்கிறுள்...

அளவுக்கதிகமாக கண்ணுக்கு தண்ணீர் அடித்துக் கழுவிவிட்டு வரும்போது பக்கத்துக் கோவிலில் கூட்டுப் பிரார்த்தனை தொடங்கிவிட்டிருந்தது.

'...பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்...'

பொருள் உணர்த்தாமல் பாட்டுச் சொல்லிக் கொடுக்க, பொருள் உணராமலேயே—நாளைக்குத் திருமணத்திற்காகவும், வேலைக்காகவும் காத்திருக்கப்போகின்றவர்கள் உரத்த குரலில் பாடுகிறுர்கள்...!

லட்சுமி முகம் கழுவி வரும்போதும்கூட வடிவேலன் அப்படியேதான் இருக்கிறுன்.

பொன்னம்மா மட்டும் சத்தகத்தின் உதவியுடன் இரும்புச்சட்டியில் ஒட்டி இருந்த பாணியைத் துப்பரவு செய்கிறுள்...

'பிள்ளையாரே... எத்தனை நாளைக்கு இதுகளை இப்படியே வைச்சிருக்கப்போமுய்?' மனதுக்குள்ளாகவே பிள்ளையாரிடம் முறையிடுகிறுள் பொன்னம்மா.

சுவாமிப் படத்திற்கு முன்பாக வந்து நின்ற லட்சுமி தேங்காயெண்ணெயை விட்டு விளக்கைப் பற்றவைத்துவிட்டு அந்தப் படத்தையே கண் வெட்டாமல் பார்க்கிறுள்...

'எனக்கும் தம்பிக்கும் நெடுக இந்தக் கதிதானே?' மனதுக்குள்ளாக எண்ணியவளுக்கு நெஞ்சின் ஓரத்தில் முளைத்த சிறு சலனம் விசும்பலாக மாறுகிறது.

அந்த விசும்பல் வெடித்துச் சிதறுமல் இருக்க அவள் இறைவனிடம் இறைஞ்சுகிறுள்.

'ஒருத்தருக்குமே உதவ முடியாத என்னை உயிரோடை ஏன் வைச்சிருக்கிறுய்?'

'என்ரை ஆசையும், என்ரை தம்பியின்ரை ஆசையும் வெறும் கற்பனைதானே?'

நெஞ்சை முட்டிக்கொண்டு வருகிற குமுறலை அடக்கிக்கொண்டு கண்ணை மூடிக்கொள்கிறுள்...

பக்கத்துக் கோவிலில் கூட்டுப்பிரார்த்தனை ஒலிக்கிறது...

நெஞ்சில் கையைக் கூப்பிக்கொள்கிறுள். அவளுக்கும் அவர்களைப்போல சத்தம்வைத்து உரத்த குரலில் பாடவேண்டும்போல் இருக்கிறது.

அவள் பாடத் தொடங்கிவிட்டாள்.

தேவாரமுமல்ல! திருவாசகமுமல்ல! திருப்புகழுமல்ல!

ஈனஸ்வரக் குரலில் அவள் பாடுகிறுள்...

'பந்தத்தைப் போக்கிவிடு—
அல்லாலுயிர்ப்
பாரத்தைப் போக்கிவிடு'

பொன்னம்மாவும் வடிவேலனும் ஒரு கணம் துடித்துவிட்டார்கள்...

பாட்டுக்கிடையே பலத்த விம்மல்... விம்மல்களுக்கிடையே விசும்பல்... விசும்பல்களுக்கிடையே பொருமல்... பொருமல்களுக்கிடையே உச்சஸ்தாயியில்,

சிந்தை தெளிவாக்கு —
அல்லாலிதைச்
செத்தவுடலாக்கு'

அவசரமாக எழும்பிய பொன்னம்மாவை வடிவேலின் உறுதியான சொற்கள் தடுக்கின்றன.

''நாளைக்கு அழாமல் இருக்க அக்கா இண்டைக்கு வேண்டுமான நேரம் அழட்டும்! அவளை அழவிடு!''

காற்று வீசியும்கூட பொன்னம்மாவுக்கு உள்ளம் மட்டுமல்ல, உடம்பும் வெகுவாகப் புழுங்குகிறது. ✤



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● உணர்வுச் சித்திரம்.

# கறுப்பு

''எப்பிடி மச்சான் உனக்குக் கலியாண ஏற்பாடெல்லாம் சரின்னு கேள்விப்பட்டன் எப்படிப் பொண்ணு ?''

''சீச்சீ... அது சரிப்பட்டு வராது. பொண்ணு சரியான கறுப்பு மச்சான். நான் அதக் கென்சல்ட் பண்ணிட்டன்.''

இரண்டு இளைஞர்களிடையே யாரோ ஒரு கறுப்பு யுவதி சிக்கித் தவிக்கிருள்.

''அடியே நிஹாரு... உனக்கும் மாப்புள்ள பாக்கிறுங்களாமே... எல்லாம் சரியாகிட்டா நீயும் படிப்புக்கு முழுக்குப்போட்டிடுவாய் போல...''

''இல்லடி ஜஹான். அப்பிடி ஒரு ஏற்பாடு செஞ்சவங்கதான். ஆனு அது சரிப்பட்டு வராது. மாப்புள்ள எனக்குப் புடிக்கல்லடி. சரியான கறுப்பு. நான் வேணுண்டு சொல்லிட்டன்.''

இரண்டு பாடசாலை மாணவியருக்கிடையே ஒரு கறுப்பு இளைஞன் சிக்கிக்கொண்டான்.

''நிஸா இன்று காலையில் நான் வர்ரப்போ பஸ் டேண்ட்ல அந்த இப்ருகிமக் கண்டனுன். அவர்ர பிரண்ட் அமீன் உன்ன விசாரித்ததாச் சொல்லச் சொல்லிச் சொன்னுரு. என்ன இருந்தாலும் அந்த அமீனுக்கு உன்மேல ஒரு கண் தாண்டி... ஆனு அமீன் நல்லவரு.''

''போடி பைத்தியக்காரி. நானுவது அந்த அமீன விரும்புறதாவது... அவனொரு கருமுண்டம்.''

இரண்டு உத்தியோகம் பார்க்கின்ற பெண்களுக்கிடையே, பாவம் அந்த அமீன்.

''சீ... நீ சரியான கறுப்பு'' என்று சொல்லக் கேட்ட குழந்தை அடம் பிடித்து அழுகிறது.

''சரிசரி நீ வெள்ளை தான்'' என்று சொல்லு மட்டும் அது அழுகிறது.

பிடவைக் கடைக்குள் ஏறிஞல், 'எனக்குக் கறுப்பு அடியோடு பிடிப்பதில்லை.'

பிரமுகர் ஒருவரின் வருகையின்போது கறுப்புக்கொடி காட்டிவிட்டால் அது அவரது வருகை வெறுக்கப்படுவதைக் காட்டும்.

நல்ல காரியமொன்றிற்காக வெளியே கிளம்பும்போது கறுப்புப் பூனை குறுக்கிட்டால் காரியம் பிழைத்துவிடுமாம். அபசகுனமாம்.

வீட்டிலே கறுப்பு நாய் வளர்க்கக்கூடாதாம். அதிலே பொல்லாத பிசாசு குடிகொண்டிருக்குமாம்.

கறுப்பை வெறுக்கின்ற கட்சிக்காரர்களின் காரணங்களிவை.

கறுப்பை ஆதரிப்பவர்களும் இருக்கின்றுர்கள்...

கறுப்பால் கவரப்பட்டவர்களும் இருக்கின்றுர்கள்.

கறுப்புக்காக ஏங்குபவர்களும் இருக்கின்றுர்கள்.

கறுப்புக்காக வாழ்பவர்களும் இருக்கின்றுர்கள்.

இவர்களில் நான் எந்தக் கட்சி?

என்னை நானே கேட்கிறேன்.

— காத்தான்குடி பாத்திமா.

---

## நியதி

நீ எதற்காக
கவலைப் படுகின்றுய்?
உனக்கு,
எது எது — எப்போது
தேவை என்று
இறைவனுக்குத்
தெரியாதா—?
அதையதை
அவ்வப்போது
உனக்கு
வழங்குகின்றுரே !
இது உன்
அறிவிற்குப்
புலப்படவில்லையா-?
ஏன், நீ
அளவிற்கதிகமாய்
ஆசைப்படுகின்றுய்-?
உனக்கு
அவை, அவை
அவ்வப்போது
கிடைக்கும்.
எப்படி என்று
குழம்புகின்றுயா-?
நீ-எப்பொழுது
உனக்கு
உண்மை உள்ளவனுக
இருக்கின்றுயோ...
அப்பொழுதே
அனைத்தும் கூடிவரும் !

—செல்வராணி பசுபதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ, நீரோ மன்னர்களே...!

## — பரிபூரணன் —

ரோம்எனும் மாநகர் எரிகின்ற வேளையில்
யாழ்மீட்ட மன்னனைப் போல்
எங்களின் சமுதாயம் தீப்பற்றி எரிகையில்
இன்பத்தில் மயங்கு கின்றோம்.
மாபெரும் அரக்கனும் மதுவினில் மூழ்கியே
மருளுவோர் எத்தனை பேர் !
மயக்கிடும் இசையிலும் மாதர்கள் விழாவிலும்
மனஞ் செல்வோர் எத்தனை பேர் !
காரென்றும் பிளேன்என்றும் அலங்கார பஸ்என்றும்
கழிப்பவர் எத்தனை பேர் !
கண்கவர் சினிமாவில் டெலிவிஷன் காட்சியில்
கைதியாய் எத்தனை பேர் !
ஏனிந்த உல்லாசப் பணக்கார வசதியென்று
எண்ணியே பார்த்த துண்டா ?
எங்களின் போராட்ட வர்க்க உணர்வினை
இல்லாமல செய்யவே இத்தனையும் !

---

நான் எந்தக் கட்சி என்பதை நிரூபிக்க எனது 1973ம் ஆண்டைய டயறி புரட்டப் படுகிறது.

கறுப்பு என்றொரு இதயத்தை வெறுத்தேன். கிட்ட வந்தபோது எட்டிச் சென்றேன். காலப்போக்கில் கறுப்பே எனக்குக் கவர்ச்சியானது.

பக்கம் பக்கமாக டயறி எழுதக்கூடிய மன உணர்வுகளை ஊற்றெடுக்கவைத்தது அந்தக் கறுப்பேதான்.

கறுப்புக்கு இருக்கின்ற கவர்ச்சி, உலகின் எந்தப் பொருளுக்கும் இருப்பதாக நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்.

என்னைக் கவர்ந்த கறுப்பு இளைஞன் ஒருவனுக்காக என் இதய வாசலைத் திறந்து வைத்து நாளும் பொழுதும் ஏங்கினேன். ஏதோ விதி வசத்தால் அவனும் நானும் பிரிந்தோம். ஆனல் மறக்கக் கூடிய மனநிலையா எனக்கு...?

அழகென்ருல் அவனல்லோ அழகு.

அவனே அழகு... அழகு... என்று உழறிப் பைத்தியமாகி விட்டேன்.

கறுப்பென்ருலும் அவள் அழகி... என்ற கதாசிரியர்களின் அறியாமை வர்ணிப்பைக் கண்டு அவர்களை ஏளனத்தோடு நோக்கினேன்.

''அவள் அழகற்றவள், என்ருலும் கறுப்பி'' என்றல்லவா அவர்கள் எழுதவேண்டும்?

என்னடா... இந்தப் பைத்தியம். கறுப்பு, அழகு என்றெல்லாம் உழறுகிருளே... என்று நீங்கள் நகைப்பது எனக்குக் கேட்கிறது.

தெண்டித்து அழகுக்காகக் காதலிப்பவர்களே... கறுப்பைக் காதலியுங்கள்.

முடிந்தால் தோல்வியும் அடையுங்கள்.

வேதனையை அறிவீர்கள். விரக்தியும் அடைவீர்கள். என் பிதற்றலையும் உண்மையென்பீர்கள்.

நீங்கள் வெள்ளையராக இருந்தால் கறுப்பு ஆடையை அணிந்துகொள்ளுங்கள்.

அதுதான் அழகு.

கேசம் வெள்ளையாகி விட்டால் ஏன் கறுப்பு 'டை' யைப் பூசிக்கொள்கின்றீர்கள்? கறுப்பின்மேற்தான் உங்களுக்கு வெறுப்பாயிற்றே...!

கறுப்பு முகத்திற் துடிக்கின்ற கருவிழிகளிற்ருன் இந்த உலகையே விலைக்கு வாங்கத் தக்க உயரிய அழகு இருப்பதனைக் கண்டு தரிசித்தேன்.

கறுப்பிலேதான் அழகு... அழகிலேதான் கறுப்பு.

சிறகடித்துப் பறந்த காக்கையின் அழகிய கறுப்பு நிறத்தில் தன்னையே பறி கொடுத்த பாரதி,

''காக்கைச் சிறகினிலே நந்த லாலா...'' என்று பாடினன்.

அவனுக்குக் கறுப்பிலே கவி பிறந்ததென்ருல்... அட்லீஸ் எனக்குக் காதலாவது பிறக்கக்கூடாதா?

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதி பகவன்

**✽ மாத்தளை அருணேசர் ✽**

ஆதி பகவன் என்ற சொல் சிவபிரானைக் குறிக்கும் சொல். ''ஆதி பகவன் முதற்றே யுலகு'' என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். மற்றும் சைவ சமய நூற்களில் ''பகவன்'', ''ஆதி'' என்ற சொற்களெல்லாம் சிவபெருமானையே குறிப்பிடுகின்றன.

''ஆதியுனக்காளா யினியல்லே னென [லாமே''
''அத்தனே அண்டரண்டமாய் நின்ற [ஆதியே''
''ஆதி போற்றி அந்தா போற்றி''
''நிரந்தரமாய் நின்ற ஆதி''
''நிறை மலர்க் குருந்த மேவிய சீர் [ஆதியே''
''ஆதி பகவன் றனதூடல் தணிப்பான் [பணிய''
''பகவனுர் பாரிடஞ் சூழ நட் [டஞ்சிட்டராய்''
''பெரியமுத்திப் பகவன் முதலவன்
திருவடியை யத்திக்கும் பத்தரெதி [ரானை
நமதென வல்லான்''

என வருவனவற்றைக் காண்க.

நம்மாழ்வார்கூட திருமாலை ஆதியம் பகவன் என்று குறிப்பிடுகின்றார்.

பகவன் என்ற சொல் ''உயர்ந்த பிரமம்'' என்னும் பொருளைக் குறிக்கிறது. பகவான் என்பதில் ஒரு பகுதி 'ப' (Bha) என்பதற்கு இரு பொருள்கள் உள்ளன. ஈசுபரன் சிருஷ்டிக்கு வேண்டியவைகளைச் சேகரிக்கிறான் என்பது ஒரு பொருள்.

மற்றது — அவன் நமக்கு 'பர்த்தா', 'தலைவன்' என்பதைக் குறிக்கிறது. 'க' (Gha) என்பது அவனுடைய சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் இவைகளைக் குறிக்கிறது. 'பக' (Bagha) என்ற சொல் அவனுடைய ஆறு குணங்களை, அதாவது ஐசுவரியம், வீரியம், கீர்த்தி, ஸ்ரீ, ஞானம், அவாவின்மை என்பவற்றைக் குறிக்கிறது.

திருமால் வழிபாட்டில் சிறந்த பெரியாரை ''பாகவதர்'' என்ற பெயரால் பண்டைத் தமிழ் மக்கள் வழங்கினர். ''பகம்'' (Bagham) எனப் பெயரிய ஆறு குணங்களால் பரிபூரணனை திருமாலின் சம்பந்தமுடையோர் பாகவதர் என்பது பொருள். திருமாலடிமையிற் சிறந்த இல்லறத்தாரை ''அடியார்'' என்றும், உலகப் பற்றற்ற அத்தகைய துறவிகளை ''பகவா'' என்றும் முன்னோர் வழங்கினர்.

## பிற சமயத்தவரின் கூற்று

திருக்குறளில் வரும் 'பகவன்' என்ற சொல் புத்தரின் பல பெயர்களில் ஒன்றாகையால், திருக்குறளை இயற்றியவர் பௌத்த சமயத்தவரே என பௌத்த சமயிகள் கூறுவர்.

பகவன் என்ற சொல் பௌத்த சமயம் உண்டாவதற்கு முன்பிருந்தே இந்து மதத்தவரால் இறைவனுக்கு வழங்கப்பட்ட திரு

> 'பகவன்' எனும் நாமம் சிவனைக் குறிக்குமா ; புத்தரைக் குறிக்குமா ?
>
> 'எண்குணத்தான்' எனப்படுபவர் யார்?
>
> பௌத்தரும், இந்துக்களும், ஜைனரும் உரிமை கொண்டாடும் 'வள்ளுவர்' எம் மதத்தவர் ?
>
> இவற்றுக்கெல்லாம் விடை தருகிறது, முதுபெரும எழுத்தாளரான 'மாத்தளை அருணேச'ரின் இந்தக் கட்டுரை.
>
> — ஆ-ர்.

நாமமாகும். இதனையே பிற்காலத்து பௌத்தர்கள் எடுத்து வழங்கினர்.

''எண் குணத்தான்'' என்றதிலிருந்து திருவள்ளுவரை அருகச் சமயத்தவர் என்று கூறுவர். எண் குணத்தான் என்பது அருகக் கடவுளுக்கே உரிய நாமம் எனக் கூறமுடியாது. ஏனெனில் எண் குணத்தான் என்பது கட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுளின் பொது இலட்சணம். சிவபிரான் எண் குணத்தான் என்று திருவாசகம் முதலிய பல சைவ நூல்களில் கூறப்பட்டுள்ளது.

''எட்டுவான் குணத்தீச னெம்மான்
[றனே''
''இறைவனை மறையவனை யெண்
[குணத்தினனே''
''எண் குணத்தார் எண்ணுயிரவர்
[போலும்
இடைமருது மேவும் ஈசனுரே''

என வருவனவற்றைக் காண்க.

''பிறப்பென்னும் பேதைமை நீங்க,
[சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு''

என்ற குறளில் ''செம்பொருள்'' என்று சிவபெருமானைத்தான் குறிப்பிடுகிறார் வள்ளுவர்.

''சிவமெனும் நாமம் தனக்கேயுடைய
செம்மேனி யெம்மான்''

என்பதில் அச்செம்பொருளே சிவம் எனக் குறிப்பதும் காண்க.

ஜைனர்களும் குறளைத் தம் நூல் என்று கூறுவர். இதற்கு அவர்கள் கூறும் காரணம்: ஜைனர்கள் கொல்லாமை கொள்கையைக் கடைப்பிடித்திருந்தனராதலால், அக்கொல்லாமையைத் திருவள்ளுவர் அழுத்தந் திருத்தமாக தம் நூலில் எடுத்துக் கூறியிருக்கிறார். அதனால் ஜைன கொள்கையுடைய நூலே திருக்குறள், அதனை இயற்றிய திருவள்ளுவரும் ஜைன சமயத்தவரே என்பது அவர்களின் கூற்று.

சைவ சமயத்தில் இவ்விதம் அக்காலத்தில் கொல்லாமை, புலாலுண்ணாமை வற்புறுத்தப்படவில்லை என்றும் கூறுகின்றனர். இக்காரணங்கள் பொருந்தா.

ஏனெனில் ஜைன, பௌத்த சமயத்தவரின் கொல்லாமை, புலாலுண்ணாமை போன்ற கொள்கைகள் இந்து சமயத்திற்குப் புதிதல்ல. இந்து சமயத்தில் பஞ்ச மகா பாதகம் என்ற ஐம்பெரும் பாவங்களைப்பற்றி பௌத்த, ஜைனர்களுக்கு முன்பே கூறப்பட்டுள்ளன. இவற்றில் கொலைப் பாதகத்தையே முதலில் வைத்துக் கூறப்படுகிறது.

இந்தக் கொள்கையைத்தான் பின் வந்த ஜைனம், பௌத்தங்களெல்லாம் பின்பற்றின.

ஆனால் மிகப் பழங்காலத்தில் காட்டுமிராண்டிகளாய்த் திரிந்த மக்கள் எவருமே கொல்லாமை, புலாலுண்ணாமை கொள்கையைக் கொண்டிருக்கவில்லை. அறியாமையால் அவர்கள் செய்த அதனை இதில் கலந்து கூறுவது ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல. ❋

---

## ஏழைக்கோர் புதுவாழ்வு!

நேரிய ஏழை இந்த
நிலத்திடை அழுத கண்ணீர்
கூரிய வாளை ஒக்கும்
கூறுசெய் துடலை வீழ்த்தும்
பாரிடை தொல்லை நல்கிப்
பண்பினை மறந்த மாந்தர்
சீரிலா வாழ்வு தன்னைச்
சிதைத்திடும் ஏழை கண்ணீர்

ஆலையில் மாடாய் நின்றே
ஆனதோர் உணவு மின்றி,
வேலைதான் செய்தார்; வந்தால்
வீட்டிலும் வறுமைக் கோலம்
மூலையில் ஓலைப் பாயில்
முடங்கியே இரவை ஓட்டி
காலையில் மீண்டும் வேலை
களிப்பினைக் காணு மக்கள்.

வறுமையில் வாடி வாடி
வாழ்வினில் மனைவி மக்கள்
சிறப்புகள் எதுவும் காணார்
சிந்திடும் வியர்வை தன்னால்,
பெருந்தெரு, மாடி, தோட்டம்,
பெரும் பெரும் கட்டடங்கள்
உருப்பெறல் காண்பீர்! ஏழை
உயர்ந்திடல் காண மாட்டார்.

பட்டினி கிடந்தே வாழும்
பாமரர் கண்ணீர் ஓர்நாள்,
தொட்டிடும் வானம் தன்னை
தொடங்கிடும் புயலின் ஆட்சி!
வட்டியில் உடல் செழிக்க
வாழ்ந்தவர், கொடியோர் பாரில்
மட்டிலாத் தனம் படைத்தோர்
மாளுவார், வாழ்வான் ஏழை!

— கவிஞர் அ. கௌரிதாசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயமான போராட்டங்கள்

குறுநாவல்

● ச முருகானந்தன்

— 4 —

லீவில் ஊருக்கு வந்திருந்த பாஸ்கரன் மதுர வெளியைப்பற்றிப் பல சுவையான தகவல்களைக் கூறினான். ஏற்கனவே கடிதங்களில் எழுதியிருந்தான் எனினும் நேராகச் சொல்வதில் சுவை இருந்தது. தாயும் சகோதரிகளும் திறந்த வாய் மூடாமல் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

உரையாடல் திசை மாறியது. அம்மா சொன்னாள்: ''பெரிய தம்பிக்கு உத்தியோகம் கிடைச்சு மூண்டு மாசம் முடியேல்லை; அதுக்கிடையிலை கலியாணம் பேசிக் கொண்டு வந்திட்டினம்...''

''நல்ல பகிடியாயிருக்கு. ஆர் அம்மா...?

''அதையேன் கேக்கிறாய்... கொக்கா ஒருத்தி இருக்கிறாள் எண்ட நினைப்பில்லாமல் அவையின்ரை அவசரத்தை... ம்... கஸ்டப்பட்டுப் படிப்பிச்சதுக்கு கொஞ்சம் உழைப்பிக்கிறதுக்கும் விடாமல்... உத்தியோகம் எடுக்கச் செலவளிச்ச காசே இன்னும் உழைச்சு முடியேல்லை... அதுக்கிடையிலை...''

''ஆர் எண்டு சொல்லாம...''

''சின்ன மாமாவை தான்...'' அம்மா இதைச் சொல்லும்போதே செல்வரஞ்சினி அவன் மனதில் மத்தாப்பாய்த் தோன்ற, அவன் முகமும் மலர்ந்தது. ஆனால் அம்மா அதைச் சிதறடிப்பது போலத் தொடர்ந்தாள்: ''நான் கடன்பட்டு உன்னைப் படிப்பிக்கையுக்கை ஒரு சதமெண்டாலும் உதவி செய்யாதவை இப்ப சொந்தம் கொண்டாடிக்கொண்டு வந்திட்டினம். கொப்பரும் தண்ணியிலை நிண்டவர்... ஓமெண்டிருப்பார்... நல்ல நேரம் நான் பக்கத்திலை நிண்டது... அந்த மனிசனுக்கு ஒரு அறிவிருக்கே...? வீட்டுக்குள்ளை மூண்டு குமருகள் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கு எண்ட எண்ணமில்லை... கொக்காவுக்கும் ஆவணியிலை இருபத்தியெட்டு வயது முடியப் போகுது...''

''அது சரி அம்மா... அக்காவுக்கும் இனி ஏன் வைச்சு இழுத்தடிப்பான்...? பெரியத்தானும் அக்காவும் ஒருத்தரை ஒருத்தர் விரும்புறது ஊர் அறிஞ்ச விசயம் தானே...?

''பேசலாம்... ஆனால் கலியாணச் செலவுக்குக் கையிலை காசில்லை... நகை நட்டும் நேர் சீராயில்லை... இந்த முறை மிளகாய்க் கண்டும் ஒரே குருமன்... மற்றதுகள் அந்தர் கணக்கிலை வித்துக் காசாக்கிப்போட்டுதுகள்... எங்களுக்குக் கறிக்குக்கூடச் சேரயில்லை...''

அம்மா வழமையான புராணத்தைப் பாட ஆரம்பித்தாள்.

எப்படியும் இந்த விடுமுறைக்குள் அக்காவின் கலியாணத்தை முடித்துவிட

இந்த இதழில் இடம்பெறவிருந்த
'தாமரைச்செல்வி'யின்
**சிறுகதையும்,**
சி. மௌனகுரு, விளம்பியன், மு. சடாட்சரம்
ஆகியோரின்
**எழுத்தோவியங்களும்**
அடுத்த இதழில் இடம்பெறும்.
— ஆ-ர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்ற எண்ணம் அவனது மனதில் விசுவரூப மெடுத்தது.

கலியாண வயது கடந்தும் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கும் அக்கா, அட்வான்ஸ் லெவல் பாஸ்பண்ணி விட்டு வேலைவெட்டியின்றி ஊர் சுத்தும் தம்பி, நெசவுக்குப் போகும் அடுத்த தங்கை, பரீட்சை எடுத்து விட்டு முடிவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் கடைசித் தங்கை, வயல் மேட்டில் உழைத்து உழைத்துச் சலித்துப் போன அப்பு, இத்தனை சுமைகளையும் எப்படியோ தாங்கிக் கொண்டு குடும்பத்தை நிர்வகிக்கும் அம்மா — எல்லோரையும் நினைத்துப் பார்க்கையில் தனக்கிருக்கும் பாரிய பொறுப்புகள் பாஸ்கரனுக்குப் புரிந்தது.

இத்தனைக்கும்மேல் அவனது மனதில் குடிகொண்டிருக்கும் செல்வரஞ்சினி — சின்ன மாமாவின் மகள் — சுமைகளின் பளுவினால் சுகங்களை நினைத்துத்பார்க்க முடியாத நிலையில் இருக்கும் அவன்!

காலம்தான் பதில் சொல்லவேண்டும்!

✲ ✲ ✲

சாப்பிட்டுவிட்டு கைகளைக் கழுவியபடி, ''தம்பி எங்கே அம்மா?'' என்று கேட்டான் பாஸ்கரன்.

முகத்தில் வடிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு, ''அவன் என்ன ஒரு இடத்திலை இருக்கிறானே? தலைக்கு மேல வளர்ந்திட்ட தால தட்டியும் கேக்கேலாது. கேட்டாலும் சீறி விழுகிறான். வீடு வாசலைப்பற்றி ஒரு பொறுப்பில்லை... கண்டறியாத கூட்டமும் கொமிற்றியும்... இவங்களுக்கெல்லாம் ஏன் வில்லங்க வெலியாத்து?'' என்று அங்கலாய்த்தாள் அம்மா.

அம்மாவின் பரிதவிப்பைப் புரிந்துகொண்ட அதே வேளையில் தம்பியின் நடவடிக்கைகளிலுள்ள நியாயங்களையும் புரிந்துகொண்டான். 'ம்... அவனுக்கும் ஒரு உத்தியோகம் வந்துதெண்டால் எல்லாம் சரியாய்ப்போகும்...' என்று எண்ணினான்.

---

## உப்புக்கரிக்குதய்யா!

யாரோ சொன்னார் —
யானையிறவு உப்பளத்தில்
நல்ல விளைச்சல்
இம்முறை என்று!
காரணம் எண்ணி
மண்டையை உடைத்தேன்;
பளிச்சிட்டது ஒன்று...
உபரி உப்பு விளைச்சலுக்குக்
காரணம் அதுவோ என்று...?
யாழ்மக்கள் மனமழ
எரிந்த நூலகத்திற்காக
சிந்திய கண்ணீர் வெள்ளம்
கடல் நீருடன் கலந்ததுதானே?
இது மிகையாகாதா?
சும்மா இருமய்யா...
திருப்பிப்போட
அது என்ன
மளிகைக் கடையா?
இல்லை தோசையா?
அறிவுக் கருவூலமய்யா...
கருவூலம்!
தெண்டித்து விழுங்கும்
உண்மையும் சமயத்தில்
உப்புக் கரிக்குமய்யா!

— திலகச்சுதன்.

---

''அவனைக் கொஞ்சம் கண்டிச்சு வை... நீ சொன்னால்தான் கேட்பான்...''

பாஸ்கரன் பதிலெதுவும் சொல்லாமல் சேட்டை எடுத்து மாட்டிக்கொண்டு புறப்பட்டான்.

தெருவில் இறங்கிய போது, நாச்சிமார் கோவில் சந்தியில் இளைஞர்கள் கூடி நின்று கதைத்துக்கொண்டு நிற்பது தெரிந்தது. கபில்தேவ், ரஜனிகாந்த், குட்டிமணி எனப் பல துறைகளையும் அலசிக்கொண்டு நின்றவர்கள், இவனைக் கண்டதும் இன்முகத்துடன் வரவேற்றனர். ''என்ன வாத்தியார் எப்படிச் சுகங்கள்?''

சிரித்துவைத்தான் பாஸ்கரன்.

''நல்லாய்க் கொழுத்திருக்கிறாய் மச்சான்...''

''கடற்கரையில சீவிக்கிறன்... தினசரி மீன் குழம்பு, மீன் அவியல், மீன் பொரியல், மீன் சொதி...'' என்றான் பாஸ்கரன் சிரித்துக் கொண்டே. மேலும் சிறிது நேரம் நின்று கதைத்து விட்டு விடைபெற்றான். ''உத்தியோகம் கிடைச்ச தோட ஆளில நிறைய மாற்றம் தெரியுது...'' என்று நண்பன் ஒருவன் சொல்வது இவனது காதில் விழுந்தது. நண்பனின் விமர்சனத்தை எடைபோட்ட பாஸ்கரன் சிரித்தான். உண்மைதான்; இந்தக் குறுகிய காலத்தில் தன்னிடம் ஒரு மாற்றம் ஏற்படுவதை அவனாலேயே உணர முடிந்தது. கூடவே வீட்டிலும் ஊரிலும் அவதானித்த உபசரிப்புகளைக் கவனித்த போது உண்மையிலேயே

...ந்தியோகம் புருஷ லட்சணம்தான் என்று எண்ணினான் பாஸ்கரன்.

யோசித்தபடியே மெல்ல நடந்துவந்து சின்ன மாமா வீட்டுக் கேற்றடியை அடைந்த பாஸ்கரன், சிறிது தயங்கி நின்றான். வாசலில் சுரேந்திரன் – சின்ன மாமாவின் கடைக்குட்டி விளையாடிக்கொண்டு நின்றான். ''வீட்டிலை ஒருத்தரும் இல்லையே சுரேந்திரன்...?

''அக்கா இருக்கிறா... அம்மாவும் அப்பாவும் தோட்டத்திற்குப் போட்டினம்... அண்ணா நெல்லியடிக்குப் போட்டார்...''

இதற்கிடையில் பாஸ்கரனின் குரல்கேட்டு வெளியே வந்த செல்வரஞ்சினி, ''சுரேந்திரன்... அத்தானை உள்ளே வந்து இருக்கச் சொல்லுங்கோ...'' என்றாள். பாஸ்கரன் நிமிர்ந்து பார்த்தான். அந்தப் பார்வையில், நாணத்தால் அவளது முகம் சடாரென்று குனிந்தது. அவள் அந்தமாதிரி மருட்சியுடன் தடுமாறுகையில் அவனுக்கு வேடிக்கையாக இருந்தது.

கதவைப் பிடித்துக் கொண்டு பாதி மறைந்தபடி குனிந்து வெட்கப்பட்டுக் கொண்டிருந்த அவளது எழிலை ரசித்தபடியே, ''வீட்டுக்கு வந்தவையோடை கதைக்காமல் ஒளிச்சு விளையாடினால்..'' என அவளைச் சீண்டினான் பாஸ்கரன்.

''... ..'' அவள் சிரித்தாள்.

''அப்ப நான் போகட்டே...?''

''இருங்கோ...'' தேத்தண்ணி கொண்டு வாறன்.''

''நான் தேத்தண்ணி குடிக்கவே வந்தனான்?''

அவள் புரியாமல் விழித்தாள். பின்னர் ஏதோ புரிந்து கொண்டவள்போல கன்னம் குழிவிழச் சிரித்தபடி உள்ளே சிட்டாகப் பறந்தாள்.

கால் எங்கும் புண்ணும், மூக்கில் சளியும், உடலெங்கும் அழுக்குமாக அந்த நாளில் அவனோடு மணல் வீடு கட்டி விளையாடிய அவளா இன்று இவ்வளவு எழிலாகக் காட்சியளிக்கிறாள்? என்று வியந்தபடியே பாஸ்கரன் அமர்ந்திருந்தபோது தேநீரும் கையுமாகத் திரும்பிய செல்வரஞ்சினி, தேவதையாய்க் காட்சிதந்தாள். 'இவளைத்தான் எனது மனைவியாக்கிக் கொள்ள வேண்டும்' என்ற எண்ணம் உறுதியாய் எழுந்தது.

''அண்ணை நெல்லியடிக்குப் போட்டார்...'' என்றாள் செல்வரஞ்சினி சம்பந்தமில்லாமல்.

பாஸ்கரன் அவளது கண்களை ஊடுருவியவாறே, ''நான் அண்ணனைப் பார்க்க மட்டும்தான் வரவேணுமே?'' என்றான் அர்த்தபுஷ்டியுடன்.

அவள் சடாரென்று அவனை நிமிர்ந்து நோக்கினாள்.

''நான் உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்...'' குறுகுறு என்று அவளைப் பார்த்தபடி சொன்னான். மீண்டும் அவள் தலையைக் குனிந்து கொண்டாள். எதுவும் கூறவில்லை.

''ஏன் ரஞ்சினி கதைக்காமல் இருக்கிறீர்? கதவோடை ஒளிச்சு விளையாடுறீர்...? அவன் குறும்பாகக் கேட்கையில், அவனது குறுகுறுப்பான பார்வையைத் தாங்க முடியாமல் அவள் சடாரென்று தலையைக் குனிந்தாள்.

''ஏன் ரஞ்சினி கதைக்காமல் நிற்கிறீர்...?''

அவளது இதயம் வேகமாக அடித்தது. ஏதாவது சொல்லவேண்டும் என்று நினைத்தாள். முடியவில்லை.

''ரஞ்சினி... உம்மைத்தான் கேக்கிறன்... என்னோடை கோபமே?''

தனது கீழ் உதட்டை மேற் பற்களால் கடித்தபடி கடைக்கண்ணால் அவனைப் பார்த்து, 'இல்லை' என்பது போல தலையசைத்தாள் ரஞ்சினி. அவனது பேச்சும் பார்வையும் ஏதோ ஒன்றை அவளுக்குத் தெரியப்படுத்துவது போல உணர்ந்தாள்.

''உமக்கு என்னைப் பிடிக்கேல்லையே?'' அவன் ஆவலுடன் கேட்டான்.

அவள் திகைப்புடன் நிமிர்ந்து அவனை நோக்கியபடி அதை மறுப்பவள்போல் தலையசைத்தாள்.

''அப்ப கதையுமன்...''

''அம்மா இப்ப வந்திடுவா...''

''அதுக்கேன் பயப்படுறீர்...? நான் என்ன பிறத்தியானே?''

அவள் சிரித்தாள். ''எனக்கு வெட்கமாயிருக்கு.''

''உம்மை எனக்குப் பிடிச்சிருக்கு...''

''ஆனால் மாமிக்கு என்னைப் பிடிக்கேல்லை...''

''ஏன்...?'' அவன் நிமிர்ந்து நோக்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உங்களுக்கு ஒண்டும், ஒருத்தரும் சொல்லயில்லையே...''

''ஓ... கலியாணப் பேச்சுக்கள் பற்றித்தானே...? இப்ப வீட்டில் நிறையப் பொறுப்பிருக்கு... அக்கா இருக்கிறு... அதுதான் மறுத்தவை...'' அவன் விளக்கம் கூறிக் கொண்டிருக்கும்போதே மாமி வந்துவிட்டாள்.

''தம்பியே...? எப்ப வந்தது...? நேற்று வந்திட்டாய் எண்டு கேள்விப்பட்டனுன்... அது சரி... எப்படி ஊர் எல்லாம் பிடிச்சுதோ? சமையல் சாப்பாடு எல்லாம் என்ன மாதிரி...?'' என்று கேட்டபடியே காய்கறிக் கடகத்தைத் தலையால் இறக்கி மூலையில் வைத்தாள்.

''ஊர் பரவாயில்லை... ஆனுல் சரியான பட்டிக்காடு. பெரும்பாலானவை மீன்பிடி காரர்தான்...''

''எங்கடை ஊரை விடப் பட்டிக்காடோ...?'' மாமி சிரித்தாள். அவனும் சிரித்தான்.

''பிள்ளை, கொத்தாணுக்குத் தேத்தண்ணி குடுத்தனியே?''

''ஓமணை அம்மா'' செல்வரஞ்சினி பதில்ளித்தாள்.

மாமி பாஸ்கரனைப் பார்த்துத் தொடர்ந்தாள்:

''எங்கட பெரியவனுக்கும் ஒரு உத்தியோகம் கிடைக்காதாம்... ம்... இன்னும் பலன் வந்து சேராதாம்... வாற ஐப்பசியிலைதான் பலன் எண்டு கந்தப்புச் சாத்திரியார் சொன்னவர்... இவனும் ஊரிலை நிண்டு இராராவாய் சுவரிலை எழுதித் திரியுறுன்... கண்டறியாத வில்லங்க வெலியாத்து...'' மாமி சலிப்புடன் கூறினுள். அதைக் கேட்கும் பொறுமை அவனிடம் இல்லை. ''அப்ப நான் போயிட்டு வாறன் மாமி...'' என்றபடி உள்ளே கடைக்கண்ணுல் பார்த்தபடி விடைபெற்றுன்.

இதற்குப் பின்னர் ஊரில் நின்ற நாட்களில் பாஸ்கரனுக்குப் பொழுதுபோவதே தெரியவில்லை.

கடைசியாக அவன் மதுரவெளிக்குப் புறப்பட இரண்டு நாட்கள் இருந்தபோது அவனது பெற்றுேர் அவனது மூத்த சகோதரிக்குக் கலியாணம் பேசி பெரிய மாமா வீட்டுக்குப் போய்த் திரும்பியதும்தான் பாஸ்கரனின் நிம்மதி குறைந்தது.

பெரிய மாமாவின் வீட்டுக்குப் போய்வந்த பெற்றுேரின் முகத்தில் சோர்வு புலப்பட்டது. காரியம் சித்தியாகவில்லை என்பது அவனுக்குப் புரிந்தது. அவன் எதுவும் கேட்கவில்லை.

அப்பா கூறிஞர்: ''அக்காவின்ர கலியாணம் சரிவராதுபோல இருக்குத் தம்பி...''

'ஏன்?' என்பதுபோல அம்மாவை நோக்கிஞன் பாஸ்கரன்.

''அம்மா... அக்காவும் அத்தானும் ஒருத்தரை ஒருத்தர் விரும்புறது மாமாவைக்கும் தெரியும்தானே?''

''அது அவைக்கும் தெரியும்... அவைக்கும் விருப்பம்தான். ஆனுல் மாற்றுக்கு உன்னைக் கேட்கினம்... இந்துவை நீ கட்டினுல்தான் சம்மதிப்பினமாம்...''

பாஸ்கரன் அதிர்ச்சியுடன் அம்மாவை நோக்கினுன். ''இதென்ன விசர்க்கதையணை அம்மா...''

''தோட்டக்காரனுக்கு மாத்தாய் உத்தியோக மாப்பிளையைக் கேக்கினமோ...¿ நல்ல எழுப்பம்தான்...'' சின்னத் தங்கச்சி சுசீ கூறினுள்.

''மூடடி வாயை... போய் உன்ர வேலையைப் பார். பெரியாக்கள் கதைக்கையுக்கை அவ வந்திட்டா இடையிலை...''

சிறிது நேர அமைதி.

''அம்மா நீங்க என்ன செய்யுறதாய் இருக்கிறியள்?''

''நான் உன்னையும் விட்டுட்டு பேந்தென்ன செய்யுறது?''

அம்மாவின் வார்த்தைகளில் அவனுக்கு சிறுது ஆறுதல் ஏற்பட்டது. நிம்மதிப் பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது.

உரையாடலை முடித்துக் கொண்டு உள்ளே வந்த பாஸ்கரன் அக்காவைப் பார்த்ததும் ஒரு கணம் அதிர்ந்து போனுன். அக்காவின் கன்னங்களில் வடிந்தோடிய நீர் அவனது நெஞ்சை என்னவோ செய்தது.

கல்யாணம் என்ற ஒரு விசயம் எத்தனை எத்தனை சிக்கல்களையும், மனத் தாங்கல்களையும் ஏற்படுத்திவிடுகின்றது!

அவன் மதுரவெளிக்குப் புறப்பட்டபோது அம்மா கேட்டா, ''தம்பி அக்காவின்ர விசயமாய் என்ன செய்வம்?''

''கொஞ்ச நாள் போகட்டும்... நான் அடுத்த முறை லீவில் வரும்போது முடிவெடுப்பம்...'' அவன் விடைபெற்றுன்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃ திலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்றான் வள்ளுவன். இந்த வள்ளுவனின் வாய் மொழிக்கு உயிர் கொடுத்தவர்களைத்தான் இந்த உலகம் அறிவுத் துறையிலே பெரும் அறிஞர்களாகவும், விஞ்ஞானிகளாகவும், அர சியல்வாதிகளாகவும், எழுத்தாளர்களாகவும், கவிஞர் கலைஞர்களாகவும் கண்டு மகிழ்ந்தது; மகிழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த வழியில் வள்ளுவன் வாய்மொழியின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இலக்கிய உலகின் நாயகனாக புகழ் மணம்பரப்பி நின்று அண்மையில் எம்மை யெல்லாம் - ஏன் இலக்கிய உலகையே விட்டுப் பிரிந்து சென்ற அமரர் கைலாசபதி அவர்களின் மறைவு தமிழ்கூறும் நல்லுலக இதயங்களை வேதனையில் ஆழ்த்திவிட்டது.

மகாகவி பாரதியாரின் நூற்றாண்டை கொண்டாடிக்கொண்டிருக்கும் எமக்கு மற்று மொரு இலக்கியத்தாரகையை இழந்து நிற்பது

புகழ்ச்சி என்ற ஒருவித மயக்க மொழிக் கப்பால் நின்று நிதர்சன உணர்வோடு தூய் மையான இலக்கியப்பணியைத் தொட்டுநின்ற வர் பேராசிரியர். அதன் விளைவு புதுமையான புரட்சியான சமுதாய மாற்றமொன்றை மக்கள் தரிசனம் பெற்றதை மறுக்கத்தான் முடியுமா? அல்லது மறைக்கத்தான் முடியுமா?

சாதாரண மனிதர்கள் இந்த உலகை விட் டுப் பிரிவதைப்பற்றி சமுதாயம் என்றைக்குமே கவலைப்படுவதில்லை; ஆனால் ஓர் அறிஞன் மறை வதை இந்தச்சமுதாயம் என்றைக்குமே தாங் கிக் கொள்வதுமில்லை. இதன்வழி இலக்கியத் தில் அறிஞனாக நின்று பணிசெய்த பேராசிரி யரின் மறைவும் உலகப்பெரும் அறிஞர்களின் பட்டியலில் சேர்ந்துவிட்டது என்பதில் ஐய மில்லை.

அப்படியானால் அமரர் கைலாசபதி அவர் களின் இலக்கியப் பங்களிப்புத்தான் என்ன? ஓ.... அவைகள் அனந்தம் அனந்தம்! பத்தி

# கைலாசபதியின் காலத்தால் அழியாத கலைப்பணிகள்

— "கலைநதி" பதியதளர்வ கே. எம். பாறூக் —

ஈடுசெய்யமுடியாத இழப்பென்றே கூறவேண் டும். தமிழ்மலை ஒன்று சரிந்துவிட்டது. பேரா சிரியர் ஒருவரை இந்த ஈழத்தாய் இழந்து விட்டாள். இலக்கிய இதயமொன்று எங்களை விட்டுப் பிரிந்துவிட்டது. இப்படியெல்லாம் இலக்கிய உள்ளங்கள் அங்கலாய்க்கும்போது பேராசிரியரின் மறைவை ஒரு கனவாக நினைக் கத்தான் முடியுமா?

பாட்டுக்கொரு பாரதியைப்போல் - கவிக் கோர் கம்பனைப்போல் - கலைக்கோர் கைலாச பதி எனத்திகழ்ந்தார். அன்னார் விட்டுச்சென்ற அந்த இலக்கியப் பாதையின் இடைவெளியை இன்னொருவரால் நிரப்பமுடியுமா என்பது வருங்காலத்தின் ஒரு கேள்விக்குறி!

ரிகை ஆசிரியராக, நூலாசிரியராக, விமர்சக ராக, எழுத்தாளராக, பேராசிரியராக, நின்று பல துறைகளிலும் வெற்றிகண்டவர். 1953ம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்துக்குச் சென்று 1957ல் கலைப்பட்டதாரியாக வெளி யேறினார். டிப்ளோமா எம். ஏ. பட்டங்களை யும் தனதாக்கிக்கொண்டதுடன் "கலாநிதி" என்ற கௌரவப் பட்டத்தையும் சுமந்துகொண் டார். 1958ல் தினகரன் பத்திரிகையின் உதவி ஆசிரியராகப் பத்திரிகைத்துறைக்குள் புகுந்து, அடுத்த ஆண்டிலேயே முழுமையாக தினகரன் ஆசிரியர் பதவியை வகித்தார். இன்றுகூட தினகரன் வாரமஞ்சரியில் முன்பக்கமாக வெளி யிட்டுவரும் எங்கள் கருத்து என்ற ஆசிரியரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்கு மகுடமிட்ட பெருமையும் இவரையே சாரும்.

1961ம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர் நியமனத்தைப் பெற்று தொடர்ந்து மூன்று ஆண்டுகள் திறமையுடன் இயங்கியதன் பலனாக அங்கொரு சிறந்த மாணவர் பரம்பரை ஒன்றைத் தோற்றுவித்ததுடன் இலக்கிய வாசகர்களையும் படைப்பாளிகளையும் உருவாக்கினார்.

சில ஆண்டுகள் வெளிநாட்டில் தங்கிவிட்டு இலங்கை திரும்பிய பேராசிரியர் அவர்கள், களனி வித்தியாலங்கார வளாகத்தில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றியபின் 1974ம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் திறக்கப்பட்டபோது, அதன் தலைவராக நியமனம் பெற்றார். 1977ல் இருந்து 1978 வரை குறுகிய காலப்பணியாக கலிபோர்னியா சென்று அங்கும் விரிவுரையாளராகக் கடமை புரிந்தார். 1978ம் ஆண்டுமுதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதியாக கைலாசபதியவர்கள் கடமையாற்றி வந்தார்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் சரளமாக பேசும் எழுதும் ஆற்றலைக்கொண்ட பேராசிரியர், மேற்கு ஐரோப்பா, அமெரிக்கா, ரஷ்யா, சீனு, ஜப்பான் போன்றபல நாடுகளுக்குச் சென்று அங்கும் தமது இலக்கியத்திறமைகளைத் தொட்டுவைக்கத்தவறவில்லை.

''டெமில் ஹீரோய் பொயட்ரி'' (Tamil Heroic Poetry) என்ற ஆங்கில நூலொன்றை எழுதிய பேராசிரியர், இரு மகாகவிகள், பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், தமிழ் நாவல் இலக்கியம், ஒப்பியல் இலக்கியம், அடியும் முடியும், இலக்கியத் திறனாய்வுப் பிரச்சினைகள், சமூகவியலும் இலக்கியமும் போன்ற நூல்களின் ஆசிரியர் என்ற பெருமையும் பேராசிரியரையே சாரும். ''இலக்கியமும் திறனாய்வும்'' என்ற நூலுக்கு 1961ம் ஆண்டு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்றி இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, சங்கம் நடத்திய நியாயபூர்வமான ஈழத்தின் இலக்கிய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்குமான போராட்டங்களில் கலந்து கொண்டு உழைத்த பெருமையும் அவருக்குண்டு.

தமது இலக்கியப்பணியை ஒரு வரப்பிரசாதமாகக்கருதி, புதிய நோக்கில் புதிய சமுதாயப் பாரம்பரியத்தை தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு அளித்து, அங்கே புதிய சிந்தனையையும் செயல்பாடுகளையும் கண்டுநின்ற கைலாசபதி அவர்கள், வாழ்நாளில் பெரும்பகுதியை இலக்கியப் பணிக்கே அர்ப்பணம் செய்திருந்தார்.

இத்துணை காலங்களும் அவர் செய்த இலக்கியப் பணிக்கு சிகரம் வைத்தாற்போல் அவரின் கடைசி இலக்கிய முயற்சிகூட மறக்கமுடியாத ஒன்றென்றே கூறவேண்டும். ஆமாம்; நாமெல்லாம் பெருமையோடு கொண்டாடி முடிந்த பார்புகழும் பாரதி நூற்றாண்டையொட்டி ஈழத்தில் வெளியிடப்பட்ட ''மகாகவி பாரதி'' என்னும் வரலாற்றுச்சுருக்க நூலுக்கு அவரால் எழுதப்பட்ட முன்னுரையேயாகும்.

மரணம் என்ற விதி, கைலாசபதியைப் பொறுத்தவரை நிறைவேற்றப்பட்டு விட்டாலும், அன்னார் விட்டுச்சென்ற பணிக்குமா என்றால் இல்லை! எனவே அவர் காட்டிச் சென்ற அந்த இலக்கிய வழிகளைப் பின்பற்றி, அதன்மூலம் நாடும் மக்களும் சுகம் கண்டு நமக்கு நன்றிகூறுமளவுக்கு நாம் உயர முயல்வதுதான் பேராசிரியருக்குச் செலுத்தும் சிறந்த காணிக்கையாகும் என்பதுதான் என் முடிவு.

✽

---


# வருந்துகிறோம்!

மரப்பசு, மோகமுள் போன்ற சில அழியாத இலக்கியச் சுவடுகளைப் பதித்த பிரபல எழுத்தாளரும் பத்திரிகையாளருமான திரு. தி. ஜானகிராமனின் மறைவுக்காக மனம் வருந்துவதுடன், அன்னாரின் குடும்பத்தவர்க்கு நமது அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம்.

ஆ-ர.

---

# பாரதி பெண்களை இழித்தும் பாடியுள்ளாரா?



● வள்ளிநாயகி இராமலிங்கம்.

பாரதி நூற்றாண்டை ஒட்டிய சில ஆய்வுகளில் தாம் ஏதோ புதிதாகச் சொல்லிவிட வேண்டும் எனும் ஆர்வத்தால் பாரதி முரண்படும் இடங்களெனச் சிலவற்றைச் சுட்டிக்காட்டித் தம்மனம் போனவாறு தம்மதம் நிலைநாட்ட விளக்கங்களைக் கொடுத்துள்ளனர் சில அறிஞர்கள். ஐக்கிய நாடுகளின் பெண்கள் முன்னேற்றம் பற்றிய தசாப்தம் இது எனும் வகையில் பெண்கள் பற்றிய முரண்பாடு எனக்காட்டப்பெற்ற ஓரிரு இடங்களைத் தர்க்கரீதியாக அணுக இங்கே முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

இப்பேரண்டத்துள்ளே எந்த ஓருயிரும் அல்லது எந்த ஒரு பொருளும் ஒன்றையொன்று ஒத்திருந்ததில்லை என்பதை யாரும் அறிவர். ஒரு மனிதனுள்ளேயே பல மனிதர் வாழ்கிறார்கள். முனிவர்கள், தத்துவஞானிகள், அறிஞர்கள், ஏன் புராணகாலத்துத் தெய்வங்கள்கூட முன்னுக்குப்பின் முரணாகத்தான் தென்படுகின்றன. சமூகத்தோடு மிகப்பெரிய பொருத்தப்பாட்டைக் கொண்டிருந்தவர்களெனக் கருதப்பட்ட லிங்கன், ரூஸ்வெல்ட் போன்றோர் கூடத் தம் குடும்பவாழ்வில் முரண்பட்டுப் பொருத்தப்பாடற்றவர்களாக வாழ்ந்ததை உளவியலறிஞர் எடுத்துககாட்டியுள்ளனர். அறிவு விரியவிரியக் கொள்கைகள் மாற்றம்பெறுவது வழக்கம். அது அறிவின் கூர்ப்பினால் ஏற்படுவன. அப்படியில்லாவிடில் எங்கோ ஓரிடத்தில் அறிவு தேங்கி விடுகின்றது. பாசிபடர்ந்து விடுகிறது. இருபத்தியோராம் நூற்றாண்டிலும் சபிக்கப்பட்ட சந்திரன் தேய்ந்துதான் வளருவான்.

பாரதி பழமைக்கும் புதுமைக்கும் பாலமமைத்து இலட்சிய சமுதாயத்தில் ஒரு ஆணோ, பெண்ணோ இப்படி இப்படித்தான் இருக்க வேண்டும் எனக் கனவு காண்கிறான். அதனைப் புதுமைப்பெண், பாரத நாடு, பாரத மாதா, நவரத்ன மாலை முதலிய கவிதைகள் வாயிலாக வெளியிடுகிறான்.

அந்த இலட்சிய சமுதாயத்துக்கு எடுத்துச் செல்லவேண்டிய தனது சமுதாயத்தின் அன்றைய நிலை அவனது வேதனைத்தீயைக் கிளறிவிட்டது. நிதர்சனமான அச்சமுதாயத்தை நோக்கி நெஞ்சு பொறுக்குதில்லையே, போகின்ற பாரதம், நடிப்புச் சுதேசிகள் முதலிய பாக்களைப் பாடியுள்ளான்.

மேற்கூறியவற்றை நினைவிலிருத்தி முதலாவது முரண்பாடு எனச்சொல்லப்படுவதை ஆராயலாம். பெண்களைத் தெய்வத்தின் நிலையில் வைத்தும் மதிப்பு அளித்தும் பாடிய பாரதி

''கண்களிரண்டிருந்தும் காணும்
திறமையற்ற
பெண்களின் கூட்டமடி''

என நடிப்புச் சுதேசிகளுக்கு உவமித்துப், பெண்களை இழிவுபடுத்துகிறானே. அங்கே ஒரு சக்தி விளக்கம்! இங்கே இழிவுக்கருத்து? அப்படி அறிவு ஆற்றல் அற்றவளா பெண்? இருக்க முடியாது. ஆண்களுக்கேயுரிய 'அடிமைக் கருத்து' நனவடி நிலையிலிருந்து அவரைமீறிப் புறப்பட்டு இத்தகைய இரண்டொரு இடங்களில் தெளிவாக வெளிப்படுகிறது என்பது அவர்களது வாதம்.

இதனை ஆழ்ந்து நோக்கும்போது, பாரதி பெண்களனைவரையுமா குறித்தார்? என்பது கேள்வி. அவர்கள் அப்படித்தான் கூறுகிறார்கள். இல்லை! அவர் கல்வியறிவற்ற பெண்களையே குறிப்பிடுகிறார். 'கண்களிரண்டிருந்தும் காணும் திறமையற்ற பெண்களுக்கு'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமே உவமிக்கிறார். 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' என்கிறாள் ஔவை. எண்ணும் எழுத்தும் எனும் பார்வைகளினூடாக உலக சம்பவங்களைத் தரிசிக்கமுடியாத பெண்களையே குறிப்பிட்டார்.

''கண்ணுடையரென்பர் கற்றோர் [முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்''

என்பது வள்ளுவம். முகத்திலே புண்களையுடைய – கல்வியறிவற்ற – மூடப் பழக்க வழக்கங்களுக்கும் வேண்டாத ஆசாரங்களுக்கும் அடிமையாகி வேண்டுமென்றே தேசம், சமுதாயம் எனும் உணர்வுகளைப் பெற மறுக்கின்ற பெண்களையே நடிப்புச் சுதேசிகளுக்கு உவமித்தார் எனக் கொள்ளலாம். ஒரே கல்லில் இரண்டு மாங்காய். நடிப்புச் சுதேசிகளுக்கு ஒரு போடு, கற்க மறுக்கும் பெண்களுக்கு ஒரு போடு.

பாரதி காலத்தில் இப்படிப் பாடுவதற்குக் காரணமான பெண்களின் கல்வி நிலை ஆய்வுக்குரியது.

பாரதி பிறந்த ஆண்டாகிய கி. பி. 1882இல் சேர் வில்லியம் ஹண்டர் தலைமையில் ஒரு கல்விக் குழு அரசினால் அமைக்கப்பட்டது. அக்குழுவின் சிபார்சின் ஏழாம் பிரிவு பெண் கல்விபற்றியது. அச்சிபார்சுகளாகப் பெண்களுக்கெனத் தனிப் பாடத் திட்டமமைத்தல், பெண் கல்வியை ஊக்கும் முகமாகப் பெண் கல்வி நிறுவனங்களுக்குத் தாராள மான்ய உதவியளித்தல், பெண்களுக்கு இலவசக் கல்வியளித்தல், பெண் பாடசாலைகளுக்குத் தனிப்பட்ட பரிசோதகர்களை நியமித்தல் முதலியன.

பாரதியார் ஏறக்குறைய 20 வயதாக இருக்கும்போது, அதாவது 1901இல் நடந்த குடிசன மதிப்புப்படி பெண்களின் எழுத்தறிவு நிலை கணக்கெடுக்கப்பட்டது. 'ஏதாவது ஒரு மொழியில் இலகுவான ஒரு வாக்கியத்தை வாசிக்கவும், தனது பெயரை எழுதவும் தெரிந்தவன்' எழுத்தறிவுடையவனாகக் கருதப்பட்டான். இந்நிலைமையில் இந்தியா பூராவும் ஒரு ஆயிரம் பேருக்கு 109 ஆண்களும், ஆயிரம் பேருக்கு 6 பெண்களும் எனும் விகிதத்தில் எழுத்தறிவுடையோராகக் கணிக்கப்பட்டனர். இதனை அதே ஆண்டு இலங்கைக் குடிசன மதிப்புப்படி ஒப்பிட்டு நோக்கும்போது இந்தியப் பெண் கல்வி மிகமிகத் தாழ்ந்த நிலையிலிருப்பதை அவதானிக்க முடியும். ஆயிரம் பேருக்கு 347 ஆண்களும், ஆயிரம் பெண்களுக்கு 69 பேரும் எழுத்தறிவுடையவராய் இருந்தனர். மாகாணரீதியில் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்தியாவில்

## ஏக்கத்தை விட்டு எழுந்திடு தோழி!

குறிஞ்சிக் குமரியே...!
கொழுந்து கிள்ளியே
சிவந்த உன் கரங்களில்
'கருமை' படர்ந்துள்ளதே...!
அதில் என்ன உணர்கிறாய்
தோழீ—?

உன் பொன்னுடலின்
வனப்பைத் திருடி —
ஒரு கூட்டம்
'பொன்னகை' செய்வதையா ?

தோழீ...நீ
தினம் சிந்தும் வியர்வையால் —
ஒரு கூட்டம்
பன்னீர் ஸ்நானம்
பண்ணுவதையல்லவா
உன் வறுமை
உணர்த்துகிறது...!

ஏன் பெருமூச்சு
விடுகிறாய்?
என்ன செய்வதென்று
ஏக்கமா—?

ஓ...அசடே !
நீ நினைத்தால்
எதுவும் செய்யலாம்;
ஏனென்றால் உன்னிடம்
இரும்பை வளைக்கும்
இதயபலம் இருக்கிறதே !

— ஸ்ரீ தேவிப்ரியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகக்கூடிய பெண்கள் இருந்தது மூன்றே மூன்று மாகாணங்களில்தான்.

| | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| பம்பாய் (1000) | 140 | 10 |
| கூர்க் | 156 | 14 |
| மதறாஸ் | 140 | 10 |
| இலங்கை (வ. மா.) | 299 | 44 |

தம் சொந்த மொழிகூடத் தெரியாத 99% பெண்களைப் பார்த்து பாரதி இப்படிப் பாடியதில் என்ன வியப்பு? இலங்கையிலே 1905ம் ஆண்டே ஆண், பெண் இரு பாலாருக்கும் கட்டாயக் கல்வி தீவிரமாக அமுலாக்கப்பட்டது. 6 வயது தொடக்கம் 14 வயது வரையாக இது இருந்தபோதும் கட்டுக்கோப்புகள் மிகுந்த தமிழ், முஸ்லீம் சமூகப் பெண்களுக்கு உயர் மட்டம் 10 வயது ஆக்கப்பட்டது. ஹேபேட் உவேஸ் குழுவின் இந்தச் சிபார்சு 1920 இல் 14 வயதாக உயர்த்தப்பட்டது. ஆனல் இந்தியாவில் 1927 இல்தான் ஹார்டாக் கல்விக் குழு பெண்களுக்கும் கட்டாயக் கல்வி பற்றி யோசித்தது. அத்தகைய ஒரு நிலை, பெண் கல்வி பற்றி சமூக ஆதரவின்மையாலும், எதிர்ப்பினுலுமே ஏற்பட்டது.

1950ம் ஆண்டுகூட ஐ. நா. மதிப்பின்படி 25% பெண்களே இந்தியாவில் எழுத்தறிவுடையோராய் இருந்தனர். எனவே பாரதி பெண்கள் நிலை கண்டு கொதித்தெழுந்ததில் ஆச்சரியமுமில்லை, அதனை இழிவுபடுத்தினரெனக் கொள்ளவுங்கூடாது.

இதேபோல் பாஞ்சாலி சபதத்தில் 'பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையோ?' எனும் சந்தர்ப்பமும் அவர்களால் எடுத்துக் கூறப்படுகின்றது. நெட்டை மரங்களாக நின்ற அத்தினபுர மக்கள் துச்சாதனன் திரௌபதியை இழுத்துச் செல்வதைப் பார்த்துப் புலம்பி நின்றனர். அது பெட்டைப் புலம்பல் போலக் கையாலாகாததனத்தைக் காட்டி நின்றது என்கிறர். வீரமில்லா நாய்கள் எனும் அவர் ஏச்சும் கவனத்துட்படவேண்டும்.

'பெட்டை' என்பது சாதாரண வழக்கில் பேச்சு மொழியோடு கூடிய கொச்சைத் தமிழ் எனக் கொள்ளலாம். மொழிச் செம்மையோடு கூடிய உயர் இலக்கியங்களில் பெட்டை எனும் சொல் மிருகங்களின் பெண்பாற் பெயராகக் கையாளப்பட்டுள்ளது (கடுவன் — பெட்டை). உலகவழக்கில் இது அறிவிற் குறைந்த உளமுதிர்வு பெருத பெண்களையும், பூரண அறிவை இன்னமும் பெற்றிராத சிறு பெண்களையும், தமது அடிமைபோல நடாத்தப்படுகின்ற பெண்களையுமே குறிக்கின்றது. எனவே இளவரசனுலும் அவனைத் தண்டித்து திரௌபதியை மீட்பது அறிவுடைய ஆண் பெண் அனைவரதும் செயலாக இருக்கவேண்டும். ஆனல் அறிவற்ற பெட்டைகளைப்போல ஆய்ந்து ஓர்ந்து செயற்படமுடியாத அத்தினபுரி மக்களின் புலம்பலைப் 'பெட்டைப் புலம்பல்' என்பதில் என்ன தவறு இருக்கமுடியும்? இங்கேயும் பெட்டை என்பதைப் பெண்குலம் முழுவதையும் குறிக்கும் சொல்லாக ஏற்கமுடியாதென்பதே கருத்தாகும்.

இதேபோல வசிட்டருக்கும் இராமருக்கும் வள்ளுவனுக்கும் வாய்த்த மனைவியர்போலத் தற்காலத்தில் பெறமுடியாது எனக் கூறி இழிவுபடுத்தினுனும். அது பிறர் கூற்முக அமைந்தாலுங்கூட அவன் சீதை, அருந்ததி, வாசுகி போன்ற பெண்களைச் சுட்டிக்காட்டினனே தவிர பதுமகோமளை, நளாயினி, மண்டோதரி போன்ற பிற கற்புடைய பெண்களைச் சுட்டிக் காட்டவில்லையே என்பதில் பெருமைகொள்ள வேண்டும். ஆயிரம் ஆண்டுகள் பசித்திருந்தாலும் தற்கால ஆண்கள் வசிட்டர் முதலானேர் ஆகமுடியாத நிலையினுள் இருக்கின்றனர். இங்கே ஆண் கற்பு பேணப்பட்டுள்ளதைக் கவனித்தல்வேண்டும். இராவணனை, சூரனை உதாரணங் காட்டாதுவிட்டாரே என அதன் நுட்பத்தைத் தேர்ந்து பெருமைப்படவேண்டும்.

பாரதி இகழ்வதுபோலப் புகழ்ந்திருக்கிருரே தவிர இழிவாகக் கூறவில்லை என்பதை முடிந்த முடிபாகக் கொள்ளலாம். ✽

---

## வருந்துகிறேம்!

தவிர்க்க முடியாத சில நடைமுறைச் சிக்கல்களால் டிசம்பர் இதழை வெளியிட முடியாமல்போனதற்காக வருந்துகிறேம்.

ஆ—ர்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்ரன் மரக்காலை

நெல்லியடி.

கட்டிட வேலைகளுக்குத் தேவையான
சகலவிதமான மரவகைகளையும்
உடனுக்குடன் பெற்றுக்கொள்வதற்கு
நாடுங்கள்

(ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்)

**அன்ரன் மரக்காலை**

**பருத்தித்துறை வீதி,**
**நெல்லியடி,**
**கரவெட்டி.**

உரிமையாளர் :
**P. S. அந்தோனிப்பிள்ளை**
**(அன்ரன்)**

---

# நியூ ஆஞ்சநேயர் மரக்காலை

மட்டக்களப்பு.

- மரப் பலகைகள்
- மர வேலைப்பாடுகள்
- நவநாகரீக நானாவித வீட்டுத் தளபாடங்களுக்கு

# NEW ANCHENEYE TIMBER DEPOT

## ANCHENEYE FURNISHING HOUSE

**38, PIONEER ROAD, BATTICALOA.**

# RAMSONS (TRAVEL GOODS) INDUSTRY

(Govt. Approved Industrialists)

Manufacturers of

- QUALITY TRAVELLING BAGS
- SCHOOL BAGS
- LADIES HAND BAGS
- RAIN COATS

&

- VARIOUS OTHER LEATHER PRODUCTS

**RAMSONS (TRAVEL GOODS) INDUSTRY**

INUVIL ROAD,
SUTHUMALAI NORTH,
MANIPAY.
(SRI LANKA)

# ஹெற்றராஜா வீடியோ சேவிஸ்

- ரெலிவிசன்
- வீடியோ டெக்
- ஜெனரேட்டர்
- வீடியோ கஸட்

ஆகியவற்றை வாடகைக்குப் பெறுவதற்கு
நெல்லியடியில் சிறந்த இடம்

**HERTARAJAH VIDEO SERVICE**

NELLIADY, KARAVEDDY.



வெளியீடு: தாரகை கலை இலக்கிய வட்டம்.
முகவரி: 21/4, பாத்திமாகிரி வீதி, மட்டக்களப்பு.
அச்சுப் பதிவு: கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.
நிர்வாக ஆசிரியர்: கண. மகேஸ்வரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org